விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | ஐப்பசி 10 | வியாழக்கிழமை (27.10.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 312



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
சீமெந்து


## திருமலையில் குண்டுவெடிப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் மட்கோ எனும் இடத்தில் நேற்று முன்தினமிரவு குண்டுவெடிப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. இக்குண்டுவெடிப்பு இடம்பெற்ற இடத்திலிருந்து 200 மீற்றர் தொலைவில் இராணுவத்தினர் நின்றுகொண்டிருந்ததாக தெரியவருகின்றது.

இச்சம்பவத்தினையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

இது குறித்து கண்காணிப்புகுழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-4)

## வெலிக்கந்தைப் பகுதியில் புலிகள் மீது தாக்குதல்!

### போராளி ஒருவர் வீரச்சாவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வெலிக்கந்தை வடக்குப் பகுதியில் இனந்தெரியாத குழுவினருடனான மோதலில் விடுதலைப் புலிப் போராளி ஒருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியினுள் நேற்றுக்காலை ஊடுருவிய இனந்தெரியாத ஆயுததாரிகள் அங்கு வழமைபோல் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த புலிகள் மீது தாக்குதல் மேற்கொண்டனர். இதன் போதே போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார். இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட போது 11 போராளிகள் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதலை மேற்கொண்டவர்கள் வெலிக்கந்தைப் பிரதேசத்திலுள்ள இராணுவ முகாமுக்குள் தப்பிச்சென்றதாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் ஆயுதக்குழுவே இத்தாக்குதலை மேற்கொண்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (ச-4)

## வவுனியாவிலும் நேற்று கைக்குண்டுத் தாக்குதல்

(வவுனியா)


வவுனியாவில் நேற்றுமாலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வவுனியா பூங்கா வீதியில் அமைந்துள்ள தமிழ் தேசிய எழுச்சிப் பிரகடன நிகழ்வு ஏற்பாட்டு குழுவின் செயலகத்திற்கு அருகாமையில் நேற்று மாலை 4.30 மணியளவில் இனந்தெரியாதோரால் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத்தாக்குதலை நடத்தி விட்டு இரண்டு நபர்கள் தப்பித்துச்சென்றதாக சம்பவத்தினை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

உள்ளூராட்சிக் காரியாலயத்தின் வளா

(12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் கொட்டத்தை அடக்கி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பேன்!



## பிரதமர் மகிந்த திருமலையில் சூளுரை

(திருகோணமலை)

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடிப் பேச்சுக்களை ஆரம்பிப்பது அவசியம். எனினும் நாட்டினைத் துண்டாட நினைக்கும் விடுதலைப் புலிகளின் கொட்டத்தினை அடக்கியே இனப்பிரச்சினையைத் தீர்ப்பேனென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க தற்போதைய சூழ்நிலை அவசியமானதாகக் காணப்படுகின்றதென அவர் கூறினார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## க.கா.குழுத் தலைவர் நாளை கிளிநொச்சிக்கு

(கிளிநொச்சி)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன்ட்பியூறு ஹெவ்டே நாளை கிளிநொச்சிக்குச் செல்கிறார். இப்பயணத்தின்போது தமிழீழ நீதிமன்றின் உத்தரவின்பேரில் விளக்கமறியலிலுள்ள பொலிஸாரின் விடுதலை குறித்து அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் அவர் பேசுவார். (ச-4)

## போராளி கோபி நேற்று விடுதலை

(கொழும்பு)

யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி சாள்ஸ் விஜயவர்த்தன படுகொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினரான கோபி எனப்படும் வீரபாண்டியன் நேற்றுப் புதன்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி கடந்த ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கொழும்பிலிருந்து வந்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கோபியைக் கைது செய்து கொழும்புக்குக் கொண்டுசென்றனர். பின்னர் கொழும்பு நீதிமன்றில் அவர் ஆஜர்படுத்தப்பட்டு அடையாள அணிவகுப்பிற்கும் உட்படுத்தப்பட்டார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்காளர் அட்டைகள் நேற்றுமுதல் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 17 ஆம் திகதி நடைபெறும் ஜனாதிபதி தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகள் யாழ்ப்பாணம் அஞ்சல் அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு விநியோகிக்கும் பணிகள் நேற்று ஆரம்பமானது.

நேற்றிலிருந்து எதிர்வரும் 9ஆம் திகதி வரை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்குச் சாவடி அமைக்கத் தடை விதிக்கக்கோரி வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

இராணுவத்தின் கட்டுப்பாடற்ற வடக்கு கிழக்குப் பகுதிகளில் வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு தடைவிதிக்குமாறு கோரி வழக்குத் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் பெரேரா நேற்று உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னான்டோ. இராணுவத் தளபதி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் இவ்மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த 2002 ஆம் ஆண்டில் நடைபெற்ற

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு இன்று வவுனியா நகரம் எழுச்சிக் கோலம்

(வவுனியா)

வவுனியாவில் தமிழ்த் தேசிய எழுச்சி நிகழ்வு மிகுந்த உணர்வெழுச்சியுடன் இன்று நடைபெறவுள்ளது. இதற்காக வவுனியாப் பிரதேசம் எழுச்சிக்கோலம் பூண்டுள்ளது.

வவுனியாவில் கடந்த ஜுலை 27ஆம் திகதி தமிழர் தாயகத்தின் பேராளர்கள் ஒன்றுகூடித் தீர்மானங்களை எடுத்திருந்தனர். வவுனியாவில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை வலியுறுத்தி மட்டக்களப்பு, கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் தமிழ் எழுச்சி நிகழ்வு நடைபெற்றன.

வவுனியாவில் தமிழ்த் தேசியப் பேராளர்களால் எடுக்கப்பட்ட தீர்மானங்களை மீண்டும் வலியுறுத்தி வவுனியா மாவட்ட மக்கள் இவ் எழுச்சி நிகழ்வினை நடாத்தவுள்ளனர்.

வவுனியா நகரசபை மைதானத்தில் இன்று பிறபகல்

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

# கொழும்பு விமான நிலையத்தில் ஏழைப்பெண்ணுக்கு நடந்த பயங்கரம்

ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உள்ள மத்திய கிழக்கு நாடொன்றுக்கு பணிப்பெண் வேலைக்குச்சென்ற ஒரு ஏழை அபலைப் பெண்ணுக்கு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் நடந்த சம்பவம் பெண்களின் பாதுகாப்பு பற்றிய ஐயம் ஒன்றை இலங்கை வாழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னால் நடை பெற்ற இச் சம்பவத்தில் ஐந்து விமான நிலைய ஊழியர்கள் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள்.மூன்று வயது நிரம்பிய பச்சிளங்குழந்தையின் தாய் அவர் என்பதும் இங்கு குறிப்பிடக்கூடிய ஒரு விடயமாகும். இச் சம்பவமானது இதற்கு முன்னரும் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்றிருக்கலாம் என்றும் பயத்தினாலும் அறியாமையாலும் அது மக்கள் பார்வைக்கு வரமால் விட்டிருக்கலாமோ என்பதுமான ஓர் சந்தேகக் குறியையே ஏற்படுத்தியிருக்கிறது.

குருநாகல மாவட்டத்தில் உள்ள குக்கிராமம் ஒன்றைச் சேர்ந்த அவ்விளம் பெண்ணை பொருளாதார நெருக்கடி, பொருத்தமான வேலை

## வேலியே பயிரை மேய்ந்தால்...

கிடைக்காத கணவன் போன்ற காரணங்கள் வெளிநாடு செல்ல தூண்டியிருக்கின்து.

நம் நாட்டிலுள்ள பல பெண்கள் பணிப்பெண் வேலைக்காக குவைத் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதை கண்ணுற்று தானும் அவ்வாறே குவைத்தில் ஒரு வீட்டில் வேலைசெய்வதற்காக ஏஜன்சி மூலமாக அதிர்ஷ்டவசமாக (?) அப்பெண் அங்கு வேலைசெய்வதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டதும் நடக்கஇருக்கும் விபரீதம் புரியாது வறுமைப்பிடிக்குள் இருந்து விடுதலை ஆகப்போகின்றோம் என்கின்ற நிம்மதியும் வாழ்வில் இதுவரை அனுபவித்து வந்ததுன்பங்களுக்கு எல்லாம் இனி ஒரு விடிவுகாலம் பிறக்கப்போகிறது என்கின்ற மகிழ்ச்சியும் பொங்க அவரும் பிரயாண ஒழுங்குகளைச் செய்தார்.

வெளி இடங்களுக்குச் சென்று வந்த முன்னனுபவம் ஒரு குக்கிராமத்தில் பிறந்த அவரிடம் இருக்கவில்லை. முதன் முறையாக தன் சொந்த மண்ணைவிட்டு அந்நிய மண்ணிற்கு காலடி எடுத்து வைக்கப்போகின்ற அச்சம் அவர் நெஞ்சில் இருந்தது இயல்பானதே.

இதனால் குறிப்பிட்ட விமானம் புறப்படும் நேரமான ஒக்டோபர் 11 ஆம் திகதி 7.30 மணிக்கு அன்று அதிகாலை 2.30மணி அளவிலேயே விமானம் நிலையம் வந்து சேர்ந்து விட்டார்.

அப்போது தான் குவைத் செல்லும் யு.ஏ.ஈ விமானத்தில் எவ்விதபடபடப்பும் இல்லாமல் பயணம் செய்யமுடியும் என்று அப்பெண் எண்ணியிருக்கக்கூடும். ஆனால் அவரின் துரதிர்ஷ்டம் அந்த அதிகாலையில் ஏனைய பயணிகள் எவருமே அங்கு வந்திருக்கவில்லை.

எனவே விமான நிலையத்தின் வராந்தாவில் போடப்பட்டிருந்த நாற்காலியில் தனியே அமர்ந்திருந்தார். துணையாருமின்றி தனிமையில் ஒருபெண் அமர்ந்திருந்தால் பலருக்குதான் கண்ணை உருத்துமே. அதுவும் முகத்தில் தெரிந்த கிராமத்து மணம், ஏழ்மைநிலை இவை அனைத்தும் அங்கிருந்த விமானநிலைய ஊழியர் ஒருவரின் கழுகுப்பார்வையில் இருந்து தப்பவில்லை.

மெல்ல அப்பெண்ணிடம் நெருங்கிப் பேச்சுக் கொடுத்த விமான நிலைய ஊழியர் ஒன்றை உணர்ந்து கொண்டார். அவர் குவைத்தில் .வேலைக்குச் செல்வதற்காக வந்திருக்கிறார் என்பதும்கூட எவருமே துணைக்குவரவில்லை என்பதும்தான் அது.

இன்னும் கொஞ்சம் நெருக்கமாகப்பேசி அப்பெண்ணிடம் நட்புறவை வளர்த்துக் கொண்ட அந்த ஊழியர் விமானம் புறப்படுவதற்கு அதிக நேரம் இருப்பதால் தன்னுடன் சிறிது நேரம் வந்திருந்து சிற்றுண்டி சாப்பிடுமாறு அழைத் திருக்கிறார். ஊழியரின் உண்மை எண்ணம் பற்றி அறியாத அப்பெண்ணும் அவ்வழைப்பை ஏற் றுக்கொண்டு விமானநிலையத்தின் இரண்டாவது மாடியில் உள்ள அறை ஒன்றுக்கு சென்றிருக்கிறார்.

சிறிது நேரத்தின்பின் மேலும் நான்கு விமான நிலைய ஊழியர்கள் அவ்வறைக்குள் சென்றிருக்கின்றனர். பொலிஸாரின் கூற்றுப்படி உள்ளே சென்ற அப்பெண்ணிற்கு ஒருகோப்பை நீர் பருகக்கொடுக்கப்பட்டதர்கவும் அதன் பின்னர் அவருக்கு எதுவுமே நினைவில்லை என்பதும் தெரியவருகின்றது.

சிறிது நேரம் கழித்து அதிகாலை 4.30 மணியளவில் கண்விழித்துப் பார்த்த அப்பெண் தாங்கொணா அதிர்ச்சியும் அருவருப்பும் அடைந்தார். அவர் கீழே படுக்கவைக்கப்பட்டிருந்ததும் அவரின் உள்ளாடைகள் நீக்கப்பட்டிருந்ததுமே இதற்கு காரணம். நடந்தனை உணர்ந்து கொண்டபோதும் வெளியே சொல்லவும் முடியாத மெல்லவும் முடியாத நிலை. விமானம் புறப்படும் நேரம் வேறு நெருங்கிக்கொண்டிருந்தது.

வாழ்வில் வர்ணஜாலங்கள் பற்றிய எதிர்பார்ப்போடு வந்த அந்தப்பெண்ணின் எதிர்காலமே




ஒரு சில நிமிடங் களில் சிதறடிக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டு விட்டது.

இனி அழுதுதான் என்ன பயன் என் றெண்ணி

## வேறெங்கு போவது ?

தன்னிடம் இருந்த எல்லாத்துணிவையும் ஒன்றாகத்திரட்டிக் கொண்டு எப்படியாவது பயணத்தை தொடர்ந்து விடுவது என்ற தீர்மானத்துடன் புறப்படத் தயாரானார்.

இந்த இடத்தில் குறிப்பிடக்கூடிய இன்னொரு விடயம் அவரை இந்நிலைக்கு ஆளாக்கிய அந்த குறிப்பிட்ட அலுவலகரே அவரை வழியனுப்பி வைத்ததுதான். இறுதியாக காலை 7.50 மணியளவில் அவ்விமானம் எதையும் அறியாமல் கிளம்பியது.

குவைத்துக்குச் சென்றதும் அப் பெண்ணிற்கு உடல் நிலையும் சரியில்லாமல் போனது. இதன் விளைவு ஒக்டோபர் 16ஆம் திகதி அப்பெண் மீண்டும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார். அப்போது தான் பண்டார நாயக்கா விமான நிலையத்தில் உள்ள பொலிஸ் நிலையத்தில் தனக்கு நடந்த அவலம் குறித்து முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாட்டைக் கேட்ட வடமேற்குப்பிரிவிற் குரியமாவட்ட பொலிஸ் ஆணையாளர் அசோக்விஜய திலக நீர்கொழும்பு பொலிஸ் அதிகாரி பி.எஸ்.கே.வித்தாரணவை உடனடி விசாரணையில் இறங்குமாறு பணித்திருக்கிறார்.

பொலிஸார் இது தொடர்பாக நடத்திய விசாரணையின் போது குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற அறையைக்காட்டுமாறு அப்பெண்ணிடம் கேட்டிருக்கிறார்.

அவருக்கு சம்பவம் நடந்தது என்று சந்தேகிக்கப்படுகின்ற அறையை அடையாளம் காட்டியிருக்கிறார்.இது பற்றி பொலிஸ் அதிகாரி கூறுமிடத்து விமான நிலையத்தின் கட்டடஅமைப்புப் பற்றி எதுவுமே தெரியாத ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த பெண்ணால் அந்த இடத்தை துல்லியமாக காட்டமுடிந்தது என்பதுதான் ஆராயப்படக் கூடிய விடயம் என்றுதெரிவித்தார்.

மேலும் நீர்கொழும்பில் சட்டமருத்துவ அதிகாரி விசாரணையின்போது குறிப்பிட்ட சம்பவம் நடந்தாக சொல்லப்படும் அறையில் பெண்ணின் தலை முடிகள் சிலவற்றையும் கண்டெடுத்துள்ளார்.

பொலிஸாரின் தீவிர விசாரணையின் பின் விமான நிலைய ஊழியர்கள் ஐவர் அவ்வறைக்குள் சென்றிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.இதனைத்தொடர்ந்து குற்றஞ்சாட்டப்பட்ட ஐவரும் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டு ஒக்டோபர் 28ஆம் திகதி வரை தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அசோக் விஜயதிலக இச்சம்வம் தொடர்பாக மேலும் கூறுமிடத்து, இச்சம்வம் குறித்து பாரபட்சம் கருதாத விசாரணை மேற்கொள்ளப்படும் என்றும் குற்றவாளிகளைக்கண்டிப்பாக பொலிஸ் சட்டத்தின் முன் நிறுத்துமெனவும் தெரிவித்தார்.

எது எப்படியோ குற்றம் உண்மை என நிரூபிக்கப் படுமானால் குற்றவாளிகள் தண்டிக் கப்படுவார்கள் ஆனால் நடந்த சம்பவத்தால் எதிர்காலம் பற்றிய நம்பிக்கையை இழந்து கேள் விக்குறியாக நிற்கும் அப் பெண்ணின் வாழ்க் கைக்கு யார் பதில் சொல்வது?. இதற்கு சட்டம் தான் பதில் சொல்ல வேண்டும். அது வரை பொறுத் திருப்போம்.

-தருமபுத்திரி

# கற்றல் திறன் விருத்திக்கு கட்டியம் கூறும் வாசிப்பு

மாணவர்களின் கற்றல் நிகழ்வின் போது எதிர்பார்த்தோ அல்லது எதிர்பாராமலோ பல்வேறு இடையூறுகளையும் தடங்கல்களையும் சந்தித்து கற்றலில் பின்னடைய வேண்டிய சூழ்நிலை உருவாகின்றது. இந்நிலை மாணவர்களின் கற்றலில் தொடர் போராட்டமாகவும் சகமாணவர்களுடன் ஈடுகொடுத்து கற்கவியலாத பின்னடைவேயே ஏற்படுத்தும்.இந்நிகழ்வுகட்கு அடித்தளமாக அமைவது வாசிப்பு எனக் கூறப்படுகின்ற திறனின் விருத்தியின்மையே என்பதைக் கல்வியியலாளர்களின் சிந்தனைகள் புடம் போட்டுள்ளன.எனவே வாசிப்புத் திறனில் ஏற்படுகின்ற பின்னடைவைச் சீரடையச் செய்வதில் அக்கறை செலுத்த வேண்டியது காலத்தின் கடமையாகும்.காரணம் சமகாலத்தைப் பொறுத்தவரையில் பாலர் முதல் பல்கலைக்கழக மாணவர்வரை வாசிப்பில் வயதுக்கேற்றளவு அடைவு நிலை காணப்படவில்லை என்பது முக்கிய குறைபாடாகவுள்ளமை யாவரும் அறிந்ததொன்றாகும். இப் பின்னடைவைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு ஆரம்ப ஆசிரியர்களைச் சார்ந்தது எனப் பல தரப்பினராலும் சுட்டிக் காட்டப்படுகின்றது. குறிப்பாக கனிஷ்ட இடை நிலை, சிரேஷ்ட இடை நிலை, கல்லூரி நிலை ஆசிரியர்கட்டு இம் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் வீழ்ச்சிக்குக் சாட்டுப்போக்குகள் கூறுவதற்கு வாயில் அவல் அகப்பட்டது போல இது அமையலாம். இது மறுப்பதற்குரியதொன்றல்ல. ஆரம்ப ஆசிரியர்கள் மற்றும் ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் இந் நோக்கத்தை நிறைவுசெய்வதற்குப் பல தடைக்கற்களை அகற்றி கரடு முரடான பாதையில் நடந்துசெல்ல வேண்டியுள்ளமையும் அனைத்துத் தரப்பினரும் அறிந்துகொள்ள வேண்டியதும் காலத்தின் தேவையாகும. எனினும் இக் குறைபாடுகளை ஆய்வு செய்வது கட்டுரையின் நோக்கமல்ல. மாறாகக் கற்பித்தல் உத்திகளைப் பயன்படுத்தி வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான் என்ற எண்ணக்கருவை வலுவூட்டுவதும் வழிகாட்டுவதுமே நோக்கமாகும்.

### பன்முக வாசிப்பு

ஒரு பிள்ளையினதோ அல்லது நிறுவனத்தினதோ கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கூடுதலான பங்களிப்பினைத் தனதாக்கிக் கொள்வது வாசிப்பேயாகும். கல்வியியலாளரான பியாகே என்பவர் தனி மனித வளர்ச்சியில் அனைத்துத் திறன்களிலும் வாசிப்புத் திறனின் மகத்துவத்தின் போக்கினை எடுத்துக் காட்டியுள்ளார். புலன் இயக்கப் பருவத்தின் ஆரம்பத்தில் பிள்ளை சுயமாகவே மழலை மொழியொன்றைப் பேசமுனைகிறது. தூல சிந்தனைப் பருவத்தில் படங்கள் மூலமாக மொழி அறிமுகம் செய்யப்படும். பின் கட்டம் கட்டமாக வாசிப்புத் திறனில் அக்கறை செலுத்தப்படும் எனவும் அதற்கேற்ப முதிர்வு நிலையை அவதானிக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியரைச் சார்ந்ததே என்கிறார் வாசிப்பில் பாடநூல்களைப் பொறுத்தவரை பல்வேறு அணுகுமுறைகள் தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றன. அவற்றை மேலோட்டமான வாசிப்பு, கிரகித்தல் வாசிப்பு, நுண் ஆய்வு வாசிப்பு என வகைப் படுத்தலாம். ஆரம்ப வகுப்புகளைப் பொறுத்தவரை எழுத்துக்களைக் கீறுதல், இனங்காணல், உச்சரித்தல் தனி எழுத்துகளைப் படங்களுடன் இணைத்தல் எழுத்துகள் படங்களுடன் கூடிய பாட வாசிப்பு, ஒத்த ஓசைச் சொற்களை வாசித்தல் குறுகி ஒலிக்கும் சொற்களை வாசித்தல், நீண்ட ஓசைச் சொற்களை வாசித்தல் என்ற வகையிலே வாசிப்பு விரிவடைந்தும் கூர்ப்படைந்தும் செல்வதை அவதானிக்கலாம்.

படிப்படியாக முதன்மைநிலை மூன்றை எட்டும்போது கிரகித்தல் வாசிப்புக்கும் நுண் ஆய்வு வாசிப்புக்கும் கூடிய அழுத்தம் கொடுக்கப்படுகிறது. இச் செயற்பாட்டின் ஊடாக புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளவும் இரண்டாம் நிலை கல்வியின் ஆரம்பப் படியாகவும் இது அமைகின்றது.

### மேலோட்டமான வாசிப்பு

இவ் வாசிப்பு கூடுதலாக பத்திரிகைகள் சஞ்சிகைகளுடன் தொடர்புடையது. குறிப்பிட்ட சில தகவல்களை மட்டும் தேடிப் பெற்றுக்கொள்வதே இதன் பிரதான இலக்காகும். இந் நிலையினை பாட விதானத்துக்குட்பட்ட புத்தகங்களில் மேற்கொள்வது பொருத்தப்பாடுடையதொன்றல்ல என்றும் ஆரம்ப வகுப்புக்களில் இதற்கான அடிக்கட்டுமானத்தையிட்டுக் கொடுக்கவேண்டியது ஆரம்பக் கல்வித்துறையின் பொறுப்பாகும். எனவே சிறுவர் இலக்கிய புத்தகங்களிலும் பத்திரிகைகளிலும் வெளிவருகின்ற சிறுவர் பகுதி கவர்ச்சிகரமான அமைப்புடன் கூடிய (பாலியல் சாராத்) துண்டுப் பிரசுரங்கள் விளம்பரங்கள் என்பவற்றை இதற்கான ஊடகமாகப் பயன்படுத்தலாம். அதற்கேற்ற வகையில் கல்வி நிலையுடன் கூடியதாக ஒரு வகுப்பறையை மாற்றலாம். இதற்கு எத்தகைய சாட்டுப் போக்குகளையும் முன்வைத்து மறுதலிக்க முடியாது.

### கிரகித்தல் வாசிப்பு

வாசிப்பில் மிக முக்கியமானதாகவும் உயிரோட்டமுள்ளதாகவும் இது இன்று கருதப்படுகின்றது. கல்வியின் யதார்த்தத்தில் ஊடுருவிப் பன்முகப் பார்வையுடன் இது செல்வாக்கைச் செலுத்தியுள்ளது. குறிப்பாக பாடவிதானத்திற்குட்பட்ட பாடநூல்களை இவ்வாறே வாசிக்க வேண்டும். அதாவது ஆரம்ப வகுப்புக்களில் முதன்மை நிலை இரண்டில் பந்திகளை வாசித்த பின் வினாவப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக என்ற நிலையில் இச் செயற்பாடு ஆரம்பமாகி படிப்படியாக கூர்ப்படைந்து செல்கின்றது. ஆரம்ப நிலையிலேயே இதற்கான அழுத்தம் கொடுக்கப்படல் வேண்டும்.

பரீட்சையில் மாணவர்கள் குறைந்த புள்ளிகளைப் பெறவும், பரீட்சையில் சித்தியடையாமைக்கும் இதுவே முக்கிய காரணம். இது எல்லாப் பருவத்தினரிடையேயும் விரவிக் காணப்படுகின்றது எனபதற்கு பல எடுத்துக்காட்டுகளை முன்வைக்கலாம். தற்போது பதவி உயர்வுப் பரீட்சைகளிலும் கிரகித்தல் வினாவுக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மூன்றாம் நிலைக் கல்வியை நிறைவு செய்தவரும் இப் பரீட்சைகளில் சித்தியடையாமையை புள்ளிவிபரங்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இதன் மகத்துவத்தைப் பேணவே பல்கோடி ரூபாய்களை செலவு செய்து இலவசப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. அதுமட்டுமன்றி தர உள்ளீட்டு நிதி வழங்கப்படுகிறது. சிறுவர் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே கருத்தூன்றி வாசிப்பதற்கும் அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் பல்வேறு இடர்களின் மத்தியிலும் ஆரம்பக் கல்வித்துறையின் ஒத்துழைப்பு வேண்டப்படுகின்றது. எனவே இதற்கென பொருத்தமானவரையில் வாசிப்புப் படிமுறையொன்றை திட்டமிடுவது சாலச்சிறந்ததாகும். சிறியதிலிருந்து பெரியதை நோக்கிச் செல்லல், தெரிந்ததில் இருந்து தெரியாதவற்றை அறிதல், இலகுவில் இருந்து கடினத்தை நோக்கிச் செல்லல் போன்ற முறைகளைப் பின்பற்றலாம். இதனால் கிரகித்தல் வாசிப்பு எளிமையாக்கப்படும்.

### நுண் ஆய்வு வாசிப்பு

இது ஆரம்ப வாசிப்புக்குப் பெரிதும் பொருத்தமானதல்ல. இடை நிலைப்பிரிவு மாணவர்கட்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்குமே மிகப் பொருத்தமானதாகக் கருதப் படுகிறது. இதன் ஊடாகவே இலக்கணம் சார் திறன்கள் விருத்தியடையும். மொழி வளர்ச்சியடையும். அதன் விளைவு மாணவரின் சொல்லாட்சி வளர்ச்சிக்கும் சிந்தனைத் திறனுக்கும் பக்கபலமாக அமையும். ஆனாலும் ஆரம்பக் கல்வியில் இதற்கான தளத்தை உருவாக்குதல் அவசியமானதே. அடிப்படை இலக்கணம் ஆரம்பக்கல்வியிலிருந்தே ஒழுங்காக ஊற்றெடுத்தால் எதிர்காலக் கல்வியியல் வாழ்வுக்கு அது கட்டியம் கூறுவதாக அமையும்.

### ஆரம்பக் கல்வி வகுப்புகளில் வாசிப்பு

பிள்ளைகள் கோடுகளையும் வட்டங்கள், நெளிவுகள் என்பவற்றை பயன்படுத்தி எழுத்துக்களை எழுதவும் பின் வாசிக்கவும் தொடங்குகின்றது. சில வேளைகளில் இது ஒழுங்கு மாறியும் அமையலாம்.இவ்விடத்திலிருந்தே பிள்ளை தனது வாசிப்பை ஆரம்பிக்கின்றது. இது கற்றலோடு மட்டுமன்றி வாழ்நாள் பூராகவும் வாழ்வியலுடன் பிணைப்பை ஏற்படுத்துகிறது. “ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது’’ என்ற பழமொழிக் கொப்ப இப் பருவத்திலேயே ஏற்ற தொனியுடனும் சரியான உச்சரிப்புடனும் நிறுத்த குறிகளுக்கு உரிய மதிப்பளித்து வாசிக்கும் பழக்கத்தை ஆசிரியர் ஏற்படுத்திக் கொடுப்பதுடன் இதற்கான சந்தர்ப்பங்களையும் வாய்ப்புக்களையும் ஏற்படுத்தி மாணவர்களைத் தட்டிக் கொடுத்து ஊக்கப்படுத்தும் பணியினை மேற்கொள்ள வேண்டும் இதனூடாகவே முன்னேற்றகரமான கல்வி இலக்கை எட்டமுடியும்.

21ஆம் நுற்றாண்டில் யாவருக்கும் கல்வி என்ற நோக்குடனேயே கல்வி நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. வகுப்பறையில் உள்ள பிள்ளைகள் எப்போதும் கற்பதற்கு ஆயத்தமாகவே இருப்பார்கள். எனவே இங்கு வருகின்ற பிள்ளைகள் எல்லோரும் கற்கக்கூடிய சூழலை உருவாக்குவது பாடசாலை முகாமைத்துவத்தின் உயரிய பொறுப்பாகும்.

இவ் வகுப்பறையில் உள்ள மாணவர்கள் சுதந்திரமாகவும் சுமுகமாகவும் வாசிக்கக் கூடிய வகையிலான கற்பித்தல் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும். இதற்கான புதிய நுட்பங்களையும் சுய சிந்தனையையும் வளப்படுத்தி வாசிப்பை மேம்பாடடையச் செய்வதில் ஆசிரியர்கள் ஆர்வம்காட்ட அதிபர்கள் ஊக்குவிப்பாளர்களாகவும் இருப்பது வரவேற்கத்தக்கது. சுருங்கக் கூறுமிடத்து தொழில்சார் மனப்பாங்குகளை நேரானவையாக மாற்றல் வேண்டும். தகவல் யுகத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற எமது மாணவச் செல்வங்களை செம்மையான எதிர்காலத்துக்கு வழிகாட்டும் பாடசாலை முகாமைத்துவத்துடன் பெற்றோர்கள் இணைந்து செயற்படுத்துவதன் மூலமே ஆரம்பக் கல்வி துறையை மேம்பாடடையச் செய்ய முடியும் என்பது மறுதலிக்க முடியாது. □

**வாசிப்புத் திறனைச் சீர்செய்ய வேண்டிய பொறுப்பு ஆரம்பக் கல்வித் துறையைச் சார்ந்ததாகும். ஆயினும் இந் நோக்கத்தை நிறைவு செய்யப் பல தடைக்கற்களை அகற்றி கரடு முரடான பாதையில் நடந்துசெல்ல வேண்டியுள்ளதாக ஆரம்பப் பாடசாலை அதிபர்கள் தரப்பில் கூறப்படுகின்றது.**

**மு.விக்னேஸ்வரன்**
**கோப்பாய்**

## இராசிபலன்

27.10.2005
(ஐப்பசி 10, வியாழக்கிழமை)
தசமி பின்னிரவு 01.38 மணிவரை
மகம் முழுவதும்
இராகுகாலம் - 01.33-03.03மணிவரை
சுபநேரம் - 07.33-09.03மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்பக்கவலை, காரிய தாமதம், ரோக நிலை, போசன சுகக்குறைவு. |
| இடபம் | தனவிரயம், தாய்வழி உறவு, வேலையில் ஆர்வம், தன்னம்பிக்கை குறைவு. |
| மிதுனம் | கூட்டு முயற்சி, மாதர் நட்பு, மனோ தைரியம், போசன சுகம். |
| கடகம் | மனோ சங்கடம், போசன சுகக்குறைவு, காரிய இடையூறு, அதிக செலவு. |
| சிங்கம் | வெகுமானம், மாதர்நட்பு, மனமகிழ்ச்சி, காரிய நன்மை. |
| கன்னி | சோம்பல் நிலை, பிறருக்கு உதவுதல், பிரயாணம், சிந்தனை மிகுதி. |
| துலாம் | தனதானிய சேர்க்கை, மாதர் நட்பு, ஆனந்தம், சயன சுகம். |
| விருச்சிகம் | எடுத்தகாரியம் கைக்கூடும், நன்கொடை, அதிகாரம், நல்ல மரியாதை. |
| தனுசு | வேலைச்சுமை, எதிர் பாராத செலவு, சரீரப்பிரயாசை, முயற்சி தாமதம். |
| மகரம் | மனக்கவலை, பொருள்விரயம், எடுத்த காரியம் தாமதமாகும், வீண்பிரச்சினை. |
| கும்பம் | கீர்த்தி, தேக நலன், உற்சாகம், மாதர் நட்பு. |
| மீனம் | மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, தேக நலன், புதிய விடயம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

**மிதிவெடி அகற்றப்பட்ட இடங்களில்**

## உலக உணவுத் திட்டத்தின் அபி. திட்டங்கள் அமுல்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மிதிவெடிகள் அகற்றப்பட்ட ஏழு இடங்களில் உலக உணவுத் திட்டம் அபிவிருத்தித் திட்டங்களை அமுல்செய்யவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இந்தவகையில்,காக்கைதீவு எருக்கலம்பிட்டி இந்து மயானம், நவாலி வடக்கு அரியம்பிட்டி இந்து மயானம், பிரம்பற்று தம்பிதுரை இந்து மயானம்,விளான் சூரியன் கலட்டி மயானம், காக்கை தீவு மழைநீர் வாய்க்கால், ஆனைக்கோட்டை நவாலி காங்கயன் வாய்க்கால், சாவல்காடு ஆனைக்கோட்டை அந்துக்குளி வாய்க்கால் ஆகியவையே இவ் வேலைத் திட்டங்களினூடாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டங்களில் வேலை செய்பவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (ரு-16)

## தபால் மூல வாக்குப் பொதிகளை இராணுவத்துக்கு அனுப்ப புதியமுறை

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் உள்ள இராணுவ முகாம்களுக்கு தபால்மூல வாக்குகள் அடங்கிய காப்புறுதி செய்யப்பட்ட பொதிகளை அனுப்பும் போது புதிய நடைமுறைகளைப் பின்பற்ற தபால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இந்த மாகாணங்களில் கடமையாற்றும் சகல இராணுவ வீரர்களின் வாக்குகள் அடங்கிய பொதிகள் இதற்கு முன்னர் பலாலி முகாமுக்கு ஒப்படைக்கப்பட்டது.

எனினும் இம்முறை தபால் வாக்குகள் அடங்கிய காப்புறுதி செய்யப்பட்ட பொதிகள் தபால் திணைக்கள ஊழியர் ஒருவர் ஊடாகவே ஒவ்வொரு முகாமுக்கும் தனித்தனியே விநியோகிக்கப் படவுள்ளது.

இதன்கீழ் சம்பந்தப்பட்ட உறுதி செய்யும் அதிகாரிக்கு இவை பாதுகாப்பாக ஒப்படைக்கப்படுவதற்கான வாய்புகள் இருப்பதாகவும், கடந்த காலங்களில் தபால் மூல வாக்களிப்பு தொடர்பில் ஏற் பட்ட பல்வேறு பிரச்சினையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

**வாசிப்பு மாதம்**
காசோலை என்றால் அகவிழி என்ற பெயருக்கும் காசுக்கட்டளை எனில் ஹவலக் ரவுணில் மாற்றக் கூடியதாகவும் அனுப்பவும்.
(வருடச் சந்தா ரூ.300 மட்டுமே)
தொடர்புகட்கு:- அகவிழி, இல-03, டொறிங்ரன் அவனியு, கொழும்பு-07.
தொலைபேசி-011 2506272 E-Mail:ahavili@ viluthu.org
வாசியுங்கள் அகவிழி திறக்கும்
வாசிப்போம்! வாசித்ததை யோசிப்போம்!
ஆசிரியர்களுக்கான மாத இதழ்
அகவிழி
ஆசிரியத்துவநோக்கு...
C-அ-1755

## இன்று ஒரு தகவல்

### உயிர் கொம்பியூட்டர்

" நான் கணக்கில் மிகவும் வீக் சார்'' என்று சொல்வதற்கு நம்மில் பலபேர் வெட்கப்படுவதில்லை. நமது மூளை கணக்குப் போட எப்போதும் தயாராகத்தான் இருக்கிறது. ஆனால் அதை நாம் சரியாக உபயோகப்படுத்துவதில்லை அது தான் விடயம். கொம்பியூட்டர் வந்த பிறகு இன்னமும் சவுகரியமாகிப் போய்விட்டது. கணக்குப் போடும் வேலைகளை அதனிடம் ஒப்படைத்துவிட்டோம்.

கணனியை விட வேகமாக மனிதனால் கணக்குப் போட முடியுமா? முடியும்! ஆனால் முடியும் என்று நிருபித்துக் காட்டியவர்கள் இந்த உலகத்திலேயே பத்து... இருபது போர்தான்·ஒரு பென்சிலோ காகிதமோ இல்லாமல் 17 இலக்க எண்களைக் கூட கூட்டி, கழித்து,பெருக்கி,வகுத்தார்கள். "நீங்கள் பிறந்த்திலிருந்து இந்த வினாடி வரைக்கும் எவ்வளவுகாலம் ஆகியிருக்கிறது என்று கேட்டால் அதை நொடிகளில் சொல்கிறார்கள். ஒரு புத்தகத்தைக் கொடுத்து படிக்கச் சொல்லி அதில் மொத்தம் எத்தனை எழுத்து என்று கேட்டால் சரியாகச் சொல்கிறார்கள். இப்படிப்பட்ட திறமைசாலிகள் இந்த உலகத்தில் இருக்கத் தான் செய்கிறார்கள்.

அதுசரி! அவர்களால் மட்டும் அது எப்படி முடிகிறது? இதற்கு சரியான விளக்கத்தை இதுவரைக்கும் யாரும் சொல்லவில்லை. இந்தக் கணக்குப் புலிகள்-கணித மேதைகள், எப்படி அவ்வளவு பெரிய கணக்குப் போடுகிறார்கள் என்று கேட்டால் அதற்கு யாராலும் சரியான விளக்கம் கொடுக்கமுடியவில்லை. ஆனால் அவர்கள் கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல் கணக்குப் போட்டுச் சொல்லி விடுகிறார்கள்.இவ்வளவுக்கும் அவர்கள் கணக்குக் கல்வியை முழுமையாகக் கற்றுக்கொண்டவர்களா என்று கேட்டால் அதுவும் இல்லை.

சோவியத் ஆய்வாளர் (Kamyshove) ஒருவர் முதல் முறையாக இது தொடர்பான ஆச்சரியமான ஒரு முடிவைச் சொல்லியிருக்கிறார். அவர் என்ன சொல்கிறார் தெரியுமா? கொம்பியூட்டர்களை தோற்கடிக்கக் கூடிய வேகத்தில் கணக்குப் போடும் திறமையுள்ள மூளை இயற்கையில் சிலபேருக்கு மட்டும்தான் இருக்குமென்பது சரியில்லையாம். இந்த உலகத்தில் பிறந்த எல்லோருடைய மூளைக்குள்ளும் ஒரு கணனி மூளை இருக்கிறது என்கிறார் அவர்.

நம்மிடமுள்ள சாதாரண மூளைக்கே அபாரமான திறமை இருக்கிறது சார். இப்போது உதாரணத்திற்கு ஒரு மாமரத்தின் உச்சிக்கிளையில் ஒரு மாங்காயைப் பார்க்கிறோம். ஒரு கல்லை எடுத்துக் குறிபார்த்து வீசுகிறோம். ஒருமுறை இல்லாவிட்டாலும் இன்னொருமுறை சரியாகப் பார்த்து அடித்து விடுகிறோம். மாங்காய் கைக்குவந்துவிடும்.

இது சாதாரணமாக எல்லோரும் செய்யக்கூடிய ஒரு காரியம். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் கண்ணி மைக்கும் நேரத்திற்குள் மனித மூளை கல்லின் எடை, மாங்காய் இருக்கும் உயரம், தூரம், எறிய வேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் கணக்குப் போட்டு சொல்லி விடுகிறதே. அதன் பின்புதானே கல்லை வீசுகிறோம். நம்மையறியாமல் நமக்குள் நடக்கும் ஒரு அதிசயம் இது.

மனிதன் படைத்த கொம்பியூட்டரினால் இவ்வளவு சிக்கல் நிறைந்த விஷயத்தை இவ்வளவு சீக்கிரத்தில் கணக்குப் போடமுடியாது. அதனால் மனித மூளைக்குள்ளே ஒரு கொம்பியூட்டர் மூளை இயங்குகிறது என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.இதை உயிர் கொம்பியூட்டர் என்று சொல்லலாம்.இயற்கை என்ன செய்திருக்கிறது என்றால் இந்த உயிர் கொம்பியூட்டர் விசையை அணைத்துவிட்டு உணர்வு மூளையின் செயல்பாட்டை திறந்து விட்டிருக்கிறது. அதனால் உணர்வு மூளையை உபயோகிக்கும் மனிதன் தனது இயற்கைத் திறமையை மறந்து தானே வளர்த்துக் கொண்ட திறமையின் மூலமாக சிந்திக்க ஆரம்பித்தான். இயற்கையின் உயிர் கொம்பியூட்டர் விசை அணைக்கப்படாமலே சிலருக்கு இருக்கிறது.

அவர்க்ள் தான் கணித மேதைகள். அவர்களுக்கெல்லாம் உயிர் கொம்பியூட்டருக்கும் உணர்வு மூளைக்கும் தொடர்பு ஏற்பட்டி ருக்கும். இந்தத் தொடர்பை எல்லோருக்கும் ஏற்படுத்துவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்து விட்டால் அதன் பின் நாம் எல்லோரும் கணித மேதைகள் தானே.அதுமட்டும் நாம் இப்படியே இருந்து கொள்வோம்.

நமது ஆள் ஒருவன் மாங்காய் அடித்த கதை உங்களுக்குத் தெரியுமா? ஒரு மரத்தின் உச்சியில் ஒரு மாங்காயை பார்த்தான். உடனே அவனுடை மூளை கல்லின் எடை, மா்ங்காய் இருக்கும் உயரம், எறியவேண்டிய விசையின் அளவு எல்லாவற்றையும் ஒரு நொடியில் கணக்குப் போட்டுச் சொல்லிவிட்டது. அடித்தான் மாங்காய் விழுந்து விட்டது. இருந்தாலும் அவன் தனது மூளையை "மோசமான மூளை'' என்று நொந்துகொண்டான்.

"ஏன்?'' என்று கேட்டேன். "என் மூளை எல்லாவற்றையும் சரியாகக் கணக்குப் போட்டுச் சொல்லிவிட்டது. இருந்தாலும் ஒரு விஷயத்தை என்னிடம் சொல்லாமல் விட்டு விட்டது "என்றான்.

எதை? என்று கேட்டேன். அந்தத் தோட்டத்துக்கு சொந்தக்காரன் என் பின்னால் 10 அடி தூரத்தில் நிற்கிறான் என்பதை எனக்கு கணக்குப் போட்டுச் சொல்லாமல் விட்டு விட்டது'' என்றான் முதுகைத் தடவிக்கொண்டே.

தென்கச்சீ கோ. சுவாமிநாதன்

## நல்ல தருணமிது, நழுவ விடலாமா? இலங்கை கலைஞர்கள் அமைப்பு பிரசாரம்

(கொழும்பு)

தேசத்தினதும் அடுத்த தலைமுறையினதும் எதிர்காலத்தை சுபீட்சமாக்கக் கூடிய தலைவரைத் தெரிவுசெய்யக்கூடிய தீர்க்கமான தருணம் உருவாகி இருப்பதாக பேராசிரியர் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தர்க்கமாக ஆராய்ந்து தேசவளங்களைப் பேணிப் பாதுகாக்கக் கூடிய தலைவரைத் தெரிவு செய்ய வேண்டுமெனவும் அவர் கூறினார்.

'இலங்கை கலைஞர்கள் ஸ்தாபனம்'நாடு பூராகவும் நடத்தவுள்ள பொதுக்கூட்டத் தொடரின் ஆரம்பநிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ் ஆரம்ப நிகழ்வில் பிரபல இலக்கியவாதியான குணதாஸ அமரசேகர கருத்துத் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் தேசிய வெளிநாட்டு சக்திகளுக்கிடையிலான போட்டியாக மாறியிருக்கிறது.

தேசிய வளங்களை விற்று ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற முனையும் வெளிநாட்டுச் சக்திகளின் பிரதிநிதியாக ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க மாறியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ தேசிய பாரம்பரிய மரபுகளைப் பேணிப் பாதுகாக்கும் தேசிய சக்திகளின் பிரதிநிதியாக உருவெடுத்திருக்கிறார் என்றார்.

பிரபல திரைப்பட இயக்குநர் சோமரத்ன திஸநாயக்க நாடு ஆபத்தை எதிர்கொள்ளும் அனைத்துத் தருணங்களிலும் பௌத்த மதகுருமார், கலைஞர்கள் ஆகியோரும் முன்வந்து பிரச்சினைகளைத் தீர்த்தார்கள் என்று தெரிவித்தார். (து-7)

## மன்னார் மாவட்டத்தில் சீரற்ற மின் விநியோகம் மின்சக்தி அமைச்சருக்கு அடைக்கலநாதன் எம்.பி கடிதம்

"மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வரும மன்னார் மாவட்டத்தில் 1989ஆம் ஆண்டிற்கு முன்னர் மன்னார் பட்டினத்துக்கு மாத்திரம் ஜெனரேற்றர் மூலமாக மன்னார் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த மின்சாரம் பின்னர் லக்சபானா மின்விநியோகத்துடன் இணைப்பதற்கு கொரிய நாட்டு நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு 1989இன் இடைப் பகுதியில் மின் விநியோகம் இலங்கை மின்சாரசபையினால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது'' என வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மன்னார் மாவட்டத்தின் தற்போதைய மின் விநியோகம் தொடர்பாக எரிபொருள் மின் சகதி அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும், லக்சபானா மின் விநியோகம் தொடங்கிய காலத்திலிருந்து சிறு கைத்தொழில்கள், பயிற்சிக் கூடங்கள் ஆகியன உருவாகின. வீட்டுப் பாவனைப் பொருட்கள் மின் இணைப்பாக மாற்றப்பட்டன. பிள்ளைகளின் கல்வி, பொழுதுபோக்கு கவனத்திலெடுக்கப்பட்டு பொருளாதார வசதி அற்ற வீடுகளில் கூட தொலைக் காட்சிப் பெட்டிகள் காட்சியளிக்கத் தொடங்கின. க.பொ.த(சா/த),க.பொ.த(உ/த) பெறுபேறுகளுடன் தமது எதிர்காலம் பற்றி எவ்வித தீர்மானமும் எடுக்கமுடியாமல் சோம்பிக் கிடந்த இளைஞர் யுவதிகள் கணனிப்பயிற்சி வகுப்புகளில் தம்மை ஈடுபடுத்த ஆரம்பித்தனர். அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள், வங்கிகள் ஆகியன, கணனி மூலம் தமது நாளாந்த வேலைகளைக் கையாளத் தொடங்கின.

மிகவும் பின்தங்கிய நிலையிலிருந்த இம் மாவட்டம் மின்னிணைப்புக் கிடைத்த பின்னர் சிறிய முன்னேற்றத்தைக் காண தலைதூக்கிய வேளையில் மின்சார விநியோகத் தடை அடிக்கடி ஏற்படுவதும், மின்சாரம் கூடிக் குறைவதும், இம் மாவட்டத்தின் முன்னேற்றத்தின் தடைக் கல்லாய் அமைந்துள்ளது. மிகவும் துரதிஷ்டவசமானதாகும்.

கடந்த மூன்று மாதங்களாக நிலமை மிகவும் மோசமாகக் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. ஒவ்வொரு மணித்தியாலயத்திற்கிடையிலும் பல தடவை மின்சாரம் தடைப்படலாம் எனும் நிலையே தற்போது இருந்து வருகின்றது.

சிறு கைத்தொழில்களில் ஆர்வம் காட்டி, ஒரு சிலருக்கு வேலைவாய்ப்பை அளித்தவர்கள் அடிக்கடி ஏற்படும் மின்தடையினால் தமது கருவி கள் சேதமாக்கப்படுவதோடு, வேலை ஆரம்பித்து இடைநடுவில் நிறுத்தப்படும் போது முழு நாளைய வேதனத்தை தொழிலாளர்களுக்கு வழங்க வேண டிய நிலையில் தாம் பெரும் நஷ்டத்திற்குள்ளா வதாகத் தெரிவிக்கின்றனர்.

அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள்,வங்கிகள் ஆகியவற்றில் வேலைகளுக்குத் தடங்கல் ஏற்படுகின்றது. வீடுகளில் மின் இணைப்பின் மூலம் இயங்கும் சகல பாவனைப் பொருட்களும் சேதமடைகின்றது. மின் இணைப்பினால் நன்மையடைந்த விவசாயிகளும் பெரும் துன்பத்திற்குள்ளாக வேண்டியுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் ஒவ்வொரு பிரஜையும் தற்போதைய சீரற்ற மின் விநியோகத்தால் பெரும் சிரமப்படுகின்றனர்.

* மின் இணைப்பிற்கென உருவாக்கப்பட்ட கோபுரங்கள் துருப்பிடித்து இடிந்து விழும் நிலையில் உள்ளன.

* மின் இணைப்பிற்கென நடப்பட்ட தூண்கள் சரிந்த நிலையில் காணப்படுவதால் வரப்போகும் வட கிழக்குப் பருவப்பெயர்ச்சி மழை கா்லத்தில் சரிந்து விழும் நிலையிலுள்ளன.

* பிரதான மின் இணைப்பிற்கெனப் பொருத்தப்பட்டுள்ள சாதனங்கள் (இன்சுலேற்றர்கள் போன்றவை)தரக் குறைவுடன் சக்தி குறைந்தனவாகவும் காணப்படுகின்றன.

* தொடர்ச்சியான மழை கடுங் காற்றுக் காலம் அண்மித்துக் கொண்டிருப்பதனால், மின்சாரம் முழுமையாக தடைப்படக்கூடிய நிலையே தற்போது உள்ளது.

* இலங்கை மின்சாரசபை மன்னார் மாவட்டத்தைப் பொறுத்த வரை ஓர் மாற்றான் தாய் மனப்பான்மையைக் கடைப்பிடிக்கின்றது.

என்பன மாவட்ட மக்கள் அனைவர் மத்தியிலும் காணப்படும் பொதுவான அபிப்பிரா்யமாகும். இவ்விடயம் தொடர்பாக மின்சாரப் பொறியியலாளர் குழு ஒன்றை அனுப்பி மன்னார் மாவட்டத்திற்கு மின் விநியோகம் வழங்கப்படும் தன்மையைப் பரீட்சித்துத் தகுந்த நடவடிக்கை எடுப்பதன் மூலம் மாவட்டத்தின் மின்விநியோகத் தடங்கலுக்கு நிவர்த்தி காணவேண்டுமென கேட்டுக் கொள்கின்றேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

## ரணிலுக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக கடமையாற்றிய காலப்பகுதியில் நாட்டின் நிதியத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் முறைகேடுகள் பற்றி இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறு தேயிலைத் தோட்ட அதிகாரசபையின் தலைவர் டிக்கிரி கொப்பேக்கடுவ முறைப்பாட்டை தாக்கல் செய்திருப்பதாக இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கிரான்ஸ் பெரன்ஸ் இன்ரநஷனல் என்ற அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையின் பிரகாரம் இலஞ்சம் வாங்குவோர் அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கை 82ஆவது இடத்தில் இருப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னைய ஆட்சிக் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க தமது ஆலோசகர்களுக்காக நாட்டின் நிதியைச் செலவிட்டுள்ளதாக அந்த அறிக்கை ஆதாரம் காட்டி இணையத்தளம் செய்திவெளியிட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கு உலகவங்கி வழங்கிய 1 கோடி 80 இலட்சம் டொலர் பணத்தை அவர் தமது உள்நாட்டு வெளிநாட்டு ஆலோசகர்களுக்கு சம்பளம் வழங்குவதற்காக பயன்படுத்தினார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

## பகிரங்க விவாதத்திற்குத் தயார் ஓமல்பே சோபித தேரர் அறிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருடன் பௌத்த கோட்பாடுகள் தொடர்பான பகிரங்க விவாதத்திற்கு வருமாறு பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ண விடுத்த சவாலை ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமல்பே சோபித தேரர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ராஜித சேனாரட்ண வார இறுதிப் பத்திரிகையொன்றினூடாக விடுத்த சவாலை தாம் ஏற்றுக் கொள்வதாக நேற்றுமுன்தினம் பாணந்துறையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே ஓமல்பே சோபித தேரர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.குறித்த விவாதத்திற்கு ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் தினம் ஒதுக்குமாறும் கேட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (ற-7)

## நஷ்டஈடு வழங்குவதற்கு ரூ.80 இலட்சம் ஒதுக்கீடு

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்ட 127 தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் நிதி ஒதுக்கீடு மேற்கொண்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பரிந்துரைக்கு அமைய 80 இலட்சம் ரூபா இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் மேலதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப உரிமையாளர்கள் தமது பஸ் வண்டியை காப்புறுதி செய்து இழப்பீட்டைப் பெற்றிருந்தால் மீதித் தொகை மாத்திரமே நஷ்டஈடாக வழங்கப்படவுள்ளது.இம்மாத முடிவிற்குள் நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பமாகும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற-7)

# சேவையை நினைவு கூர மணிக்கூட்டுக் கோபுரங்கள்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கல்வியமைச்சராக கல்வித் துறை சீர்திருத்தத்தை பத்து ஆண்டு காலம் முன்னெடுத்துச் சென்றதை நினைவு கூரும் வகையில் தேசிய பாடசாலைகள், நவோதயப் பாடசாலைகளில் மணிக்கூட்டுக் கோபுரங்களை அமைப்பதற்கு நிதியொதுக்கடு செய்துள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.எல். குணவர்த்தன தெரிவித்தா.

வடக்கு - கிழக்கு உட்பட நாடு பூராகவும் உள்ள 324 தேசிய பாடசாலைகளிலும் 170 நவோதயப் பாடசாலைகளிலும் இந்த மணிக்கூட்டுக் கோபுரங்கள் அமைக்கப்படவுள்ளன.

1994ஆம் ஆண்டு ஜனாதிபதியாக சந்திரிகா குமாரதுங்க பதவியேற்றதன் பின்னர் கல்விச் சீர்திருத்தத்தினை நடைமுறைப்படுத்தி கல்வித் துறையில் பெரும் முன்னேற்றங்களை கொண்டு வந்தார் என்று மேலதிகச் செயலாளர் தெரிவித்துள்ளாா. (து-7)

# ஏறிச் செல்கிறது எரிவாயுவின் விலை

(கொழும்பு)

அடுத்த வரவு செலவுத்திட்டத்திற்கு முன்னர் சமையல் எரிவாயு கொள்கலன்களின் விலைகள் அதிகாிக்கப்படலாமென்று தெரிவிக்கப்படுகிறது.

முன்னொருபோதும் இல்லாத வகையில் உலக சந்தையில் எரிவாயு விலை வேகமாக அதிகரித்திருபபதாக இலங்கையின் எரிவாயு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

வீட்டுப்பாவனைக்கான எரிவாயு கொள்கலன்களின் விலைகள் 150ரூபாவினால் அதிகரிக்கப்படலாம என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் எரிவாயு மெற்றிக தொன் ஒன்றின் விலை 435 அமெரிக்க டொலராக இருந்தது. எனினும தற்போது அதன் விலை 520 அமெரிக்க டொலராக அதிகரித்திருக்கிறது.

உலக சந்தையில் எரிவாயு விலைகள் மேலும் அதிகரிக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவை தாக்கிய சூறாவளி காரணமாக எரிவாயு நிறுவனங்கள் பாதிக்கப்பட்டன.

உலக சந்தையில் எரிவாயு விலை அதிகரிப்புக்கு இதுவுமொரு காரணமெனக் கூறப்படுகின்றது. (த-9)

## புனரமைப்பு

(பொன்னாலை)

வடமராட்சி மண்டான் கப்பூது வீதி மற்றும் அவ்வீதியில் அமைந்துள்ள பாலம் என்பனவற்றை புனரமைப்புச் செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் இப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மழைகாலங்களில் இவ்வீதியில் பெருமளவு வெள்ளம் தேங்கி நிற்பதால் இப்பகுதி மக்கள் சாவகச்சேரி யாக்கரு வீதியால் சுற்றியே இதுவரை காலமும் பயணித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ற-49)

## நிதியொதுக்கீடு

(பொன்னாலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலா பிரிவிலுள்ள சில்லாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு தளபாடக் கொள்வனவுக்காக 50 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்-மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராசாவின் 2005ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 50ஆயிரம் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (ற-49)

## விண்ணப்பம் கோரல்

(பொன்னாலை)

முன்பள்ளி கல்வி நிகழ்ச்சித் திட்ட கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

மும்மொழி மூலம் நடைபெறவுள்ள இக்கற்கை நெறிக்கான விண்ணப்படிவங்களையும், கையேட்டினையும் திறந்த பல்கலைக்கழக தலைமையகத்திலும், பிராந்திய நிலையங்களிலும் எதிர்வரும் நவமபர் மாதம் 3 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது,

இக்கற்கை நெறிக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆறு பாடங்களில் சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும் எனவும், இக்கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய இறுதித்தினம நவம்பர் 11ஆம் திகதி எனவும் அறிவிககப்பட்டுள்ளது. (ற-49)

## கணனிப் பயிற்சி

(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு மாகாண முகாமைத்துவ பயிற்சித் திட்டத்தின் கீழ யாழ் மாவட்டத்தில் முகாமைத்துவ உதவியாளர் தரம் III இல் (எழுதுநர் தரம் II ஆ) கடமையாற்றும் உத்தியோகத்தர்களிற்கான 2ஆவது அணியினருக்கான கணனிப் பயிற்சி வகுப்புக்கள் இன்று தொடக்கம் இருவாரகாலம் யாழ்ப்பாணம சி.ரி.பி கணனி பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட மாகாண பிராந்திய ஆணையாளர் திருமதி.சிவலிங்கம் கடித மூலம் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளார்.

2வது அணியில் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ள சகலரையும் தவறாது இப் பயிற்சி நெறியில் கலந்து கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ற-47)

## வீதி திருத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாகத் திருத்தப்படாதிருநத கஸ்தூரியார் வீதியையும், பிறவுண் வீதியையும் இணைக்கும் சிவகுருநாதர் வீதியினை திருத்துவதற்கு யாழ் மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திருத்த வேலைக்கான கற்கள் பறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-47)

## மாற்றம்

இன்று நடைபெறவிருந்த யாழ்.இந்துக் கல்லூரியின் விஞ்ஞான மன்றத்தின் வருடாந்த விஞ்ஞான விழாவும், 'இந்துவிஞ்ஞானி' நூல் மற்றும் இறுவட்டு வெளியீட்டு விழாவும் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அரசாங்க கேள்வி அறிவித்தல்

**நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் யாழ்ப்பாண மாவட்டத்திற்கு நிவாரணத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கோதுமை மா கேள்வி கோரல்**

**ஒக்டோபர், நவம்பர், டிசெம்பர் – 2005**

1) யாழ்ப்பாண மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு கீழ்க் குறிப்பிட்ட அளவிலான மெற்றிக் தொன் கோதுமை மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவாகளிடமிருந்து கோரப்படுகின்றன. மாவை பின்வரும் அடிப்படையில் விநியோகம் செய்யப்படல் வேண்டும்.

| விநியோகிக்க வேண்டிய தொகை | அளவு |
|---|---|
| 2005 ஒக்டோபர் | 400Mt |
| 2005 நவம்பர் | 400Mt |
| 2005 டிசெம்பர் | 400Mt |

கேள்விகளை சமர்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00இனை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும், கேள்வி ஆவணங்களையும் 2005.10.26ஆம் திகதி தொடக்கம் 2005.11.10 ஆம திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப 10.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 1 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - Bid Bond) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

3) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ யாழ்.செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு நல்லிணக்கச் செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2005.11.11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப 3.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமூகமளிக்க முடியும்.

4) நீள தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கோதுமை மா வழங்கலுக்கான கேள்வி'' என எழுதப்பட வேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல்படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

6) கேள்வி விண்ணப்ப இறுதித் திகதியிலிருந்து 30 நாட்கள் வலுவுடையதாக இருக்கும்.

க.கணேஷ்,
தலைவர் /அரச அதிபர்
மாவட்ட கேள்விச் சபை / மாட்டச் செயலகம்.
யாழ்ப்பாணம்.
25.10.2005



அ.தம்பித்துரை எழுதிய ''ஈரமில்லா இதயம்'' வெளியீட்டுவிழாவில் சிவ சரவணபவன் (சிற்பி) தலைமையுரை நிகழ்த்துவதையும், வெளியீட்டுரை நிகழ்த்திய பேராசிரியர் சண் முகலிங்கன், சிறப்புப் பிரதியினை சி.குமாரவேலுவுக்கு வழங்குவதையும், நடுவில் நூலாசிரியர் நிற்பதையும் மற்றும் அதிபர் கலாபூசணம் த.வாமதேவன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# தேசிய பொருளாதாரத்தினூடாக நாட்டை அபி. செய்ய திட்டம்

## - பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய பொருளாதாரத்தினூடாக நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை முன் னெடுத்துச் செல்ல திட்டமிட்டுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தியின் மூலம் நாட்டிலுள்ள அனைவருக்கும் நன்மை பயக்கும் திட்டமொன்றை உருவாக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தங்காலையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற வர்த்தக சந்திப்பொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் நீதி மற்றும் நற்பண்புகளை ஏற்படுத்தி நாட்டை மீளக் கட்டியெழுப்பப் போவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-7)

# கோட்டை புகையிரத நிலையம் முன் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக சுனாமி ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான மீனவக் குடும்பங்கள் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் கடந்த திங்கட்கிழமை ஈடுபட்டனர்.

நாட்டின் சகல பகுதிகளிலிருந்தும வருகை தந்திருந்த மீனவக் குடும்பங்கள் சுனாமிப் பேரலை இலங்கையைத் தாக்கி இற்றைக்கு சுமார் 10 மாதங்கள் ஆகியும் கூட அரசு பாதிக்கப்பட்ட மக்கள் மீது பாராமுகம் காட்டி வருகின்றது எனக் குற்றஞ் சாட்டினர்.

இதனால் தாங்கள் சொலலெணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் சர்வதேச நாடுகளினால் வழங்கப்பட்ட உதவிகளினைக் கூட பகிர்ந்தளிக்காது ஆட்சியில் உள்ளவர்கள், அரசியல் செய்து வருகின்றனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். (து-4)

# வினாடி வினாப் போட்டி –2005

கடந்த 13ஆம் திகதி நடைபெறவிருந்த வணிகக்கல்வி, சைவசமய வினாடி வினாப் போட்டி இன்று காலை 9.30மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும் என தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மாலைகட்டல், கோலம் போடல் ஆகிய போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சி லயன்ஸ் கழகத்தினர் இப்பரிசில் பொருட்களை வழங்கியுள்ளனர்.

கடந்த வருடம் நடைபெற்ற இப் போட்டிக்கான பரிசில்களையும் இவர்களே வழங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வணிகக் கல்வி தரம்10,11, பங்குபற்றும் பாடசாலைகள்:**

மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**வணிகக் கல்வி தரம்13, பங்குபற்றும் பாடசாலைகள்:**

மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.

**சைவசமயம் தரம்10,11, பங்குபற்றும் பாடசாலைகள்:**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி,

**சைவசமயம் தரம்12,13, பங்குபற்றும் பாடசாலைகள்:**

வரணி ம.வி, மீசாலை வீரசிங்கம் ம.வி, சாவகச்சேரி மகளிர் கல்லூாி

(அ-108)

# தமிழீழ மீட்புநிதிக் கா

## உடுவில் உதவி அரச அதிபர் பிரிவு (நேற்றைய தொடர்ச்சி)

290.யா/உ/ 5160திரு. மயில்வாகனம் இராஜசுப்பிரமணியம்.
291.யா/உ/ 5177திரு. செல்லப்பா மார்க்கண்டு.
292.யா/உ/ 5197திருமதி. சிவபாக்கியம் பொன்னம்பலம்
293.யா/உ/ 5201திரு. துரையப்பா செல்வநாயகம்.
294.யா/உ/ 5222திரு. சண்முகம் செல்லர்.
295.யா/உ/ 5258திரு. செல்லத்துரை சீவரத்தினம்.
296.யா/உ/ 5281திருமதி. யோகமலர் நாகலிங்கம்.
297.யா/உ/ 5284திரு. சின்னப்பு பிலேந்திரன்.
298.யா/உ/ 5293திருமதி. புஸ்பராணி தர்மரட்ணம்.
299.யா/உ/ 5315திரு. காசிப்பிள்ளை சந்திரசேகரம்.
300.யா/உ/ 5374திரு. யோசேப் திருஞானம்.
301.யா/உ/ 5382திரு. செல்லர் சங்கரலிங்கம்.
302.யா/உ/ 5383திரு. இளையதம்பி பிரகாசம்.
303.யா/உ/ 5402திருமதி. பவளம் இராசரத்தினம்.
304.யா/உ/ 5403திருமதி. கனகம்மா இராசதுரை.
305.யா/உ/ 5409திருமதி. சுந்தரம் நடேசு.
306.யா/உ/ 5410திரு. மௌனலிங்கம் முத்தையா.
307.யா/உ/ 5425திருமதி. இராசமலர் தர்மராசா.
308.யா/உ/ 5449திருமதி. பரமேஸ்வரி வைத்ததீஸ்வரன்.
309.யா/உ/ 5477திரு. அன்னதானம் தவப்பிரகாசம்.
310.யா/உ/ 5503திருமதி. தங்கரத்தினம் கதிரவேலு.
311.யா/உ/ 5504திருமதி. சிவக்கொழுந்து அருணாசலம்.
312.யா/உ/ 5567திரு. கனகசேகரம் தெசராசசிங்கம்.
313.யா/உ/ 5568திரு. ஆசிர்வாதம் றெயினோல் பீற்றர் அன்ரனி.
314.யா/உ/ 5593 திருமதி. நவரத்தினம் தில்லைநாதன்.
315.யா/உ/ 5596திரு. நாகம்பிள்ளை பாலசிங்கம்.
316.யா/உ/ 5606திருமதி. இராசம்மா குலத்திங்கம்.
317.யா/உ/ 5620திரு. இராசையா சுப்பிரமணியம்.
318.யா/உ/ 5625திருமதி. சின்னம்மா சின்னத்தம்பி.
319.யா/உ/ 5659திரு. மாணிக்கம் கந்தசாமி.
320.யா/உ/ 5663திரு. சோமசுந்தரம் நடேசப்பிள்ளை.
321.யா/உ/ 5678திரு. சீனிவாசகம் பாலகிருஷ்ணன்.
322.யா/உ/ 5683திருமதி. ஞானேஸ்வரி அப்புத்துரை.
323.யா/உ/ 5691திருமதி. இராசாத்தி மொசெஸ்.
324.யா/உ/ 5693திருமதி. மகேஸ்வரி ஞானசுந்தரம்.
325.யா/உ/ 5716திரு. துரையப்பா ஞானசேகரம்.
326.யா/உ/ 5726திருமதி. இராசம்மா முருகேசு.
327.யா/உ/ 5749திரு. இளையதம்பி கந்தையா.
328.யா/உ/ 5754திருமதி. தங்கரத்தினம் பொன்னையா.
329.யா/உ/ 5775திரு. சின்னப்பு வேலாயுதம்.
330.யா/உ/ 5778திருமதி. பொன்னம்மா தம்பிஜயா.
331.யா/உ/ 5789திருமதி. சரஸ்வதி நாகரத்தினம்.
332.யா/உ/ 5856திருமதி. சரஸ்வதி மார்க்கண்டு.
333.யா/உ/ 5859திருமதி. சின்னம்மா சிவசம்பு.
334.யா/உ/ 5876திருமதி. அன்னம்மா கந்தசாமி.
335.யா/உ/ 5895திரு. கையிலாயர் சண்முகநாதன்.
336.யா/உ/ 5900திருமதி. சிவபாக்கியம் நமசிவாயம்.
337.யா/உ/ 5966திருமதி. பூரணம் கிருஸ்ணன்.
338.யா/உ/ 5971திரு. சின்னத்தம்பி பொன்னுத்துரை.
339.யா/உ/ 5992திருமதி. கண்மணி சபாரத்தினம்.
340.யா/உ/ 6006திருமதி. இராஜசுந்தரம் பாலசிங்கம்.
341.யா/உ/ 6058திரு. கந்தையா பாலசிங்கம்.
342.யா/உ/ 6075திரு. தம்பாப்பிள்ளை வையிரவநாதன்.
343.யா/உ/ 6173திருமதி. அன்னலட்சுமி காசிநாதன்.
344.யா/உ/ 6221திருமதி. பரமேஸ்வரி சுப்பிரமணியம்.
345.யா/உ/ 6228திரு. அருணாசலம் முருகையா.
346.யா/உ/ 6259திருமதி. மனோன்மணி சிவபாதசுந்தரம்.
347.யா/உ/ 6315திருமதி. சரஸ்வதி வயித்திலிங்கம்.
348.யா/உ/ 6337திரு. சோமசுந்தரஜயர் பாலகிருஷ்ணசர்மா.
349.யா/உ/ 6346திரு. சங்கரப்பிள்ளை யோகராசா.
350.யா/உ/ 6389திருமதி. செல்வமலர் செல்வநாயகம்.
351யா/உ/ 6412திரு. மாணிக்கர் நடராசா.
352.யா/உ/ 6438திருமதி. இரத்தனம் சற்குணம்.
353.யா/உ/ 6446திரு. கணபதிப்பிள்ளை குமாரசாமி ஞானமித்திரன்.
354.யா/உ/ 6449திரு. பிறின்ஸ் முத்துவேல் ஜெயரட்ணம் ரட்ணம்.
355.யா/உ/ 6456திரு. சின்னையா இராசலிங்கம்.
356.யா/உ/ 6457திருமதி. திலகவதி கனகநாயகம்.
357.யா/உ/ 6517திருமதி. பாக்கியம் குமரையா.
358.யா/உ/ 6555திருமதி. தங்கம்மா சின்னத்துரை.
359.யா/உ/ 6569திருமதி. புவனேஸ்வரியம்மா விஜயரத்தினம்.
360.யா/உ/ 6601திருமதி. கமலேஸ்வரி திருஞானசம்பந்தர்.
361.யா/உ/ 6614திரு. செல்லையா சுப்பிரமணியம்.
362.யா/உ/ 6618திரு. பொன்னையா மார்க்கண்டு.
363.யா/உ/ 6638திரு. கதிரேசு சுப்பிரமணியம்.
364.யா/உ/ 6644திரு. செல்லத்துரை இராசதுரை.
365.யா/உ/ 6663திரு. யோசுவா மனோகரன்.
366.யா/உ/ 6689திருமதி. பாக்கியம் இராஜசிங்கம்.
367.யா/உ/ 6709திருமதி. சத்தியதேவி கிருபைரத்தினம்.
368.யா/உ/ 6800திரு. நாகன் பொன்னுத்துரை.
369.யா/உ/ 6807திருமதி. தங்கம்மா கனகசபை.
370.யா/உ/ 6879திரு. வைத்திலிங்கம் அருளையா.
371.யா/உ/ 6881திரு. சின்னப்பிள்ளை சுவாமிநாதன்.
372.யா/உ/ 6892திருமதி. பார்வதி செல்லப்பா.
373.யா/உ/ 6923திரு. வல்லிபுரம் சிவபாதம்.
374.யா/உ/ 6950.திரு. வர்ணகுலசிங்கம் ஜெகநாதன்.
375.யா/உ/ 7019திருமதி. வள்ளிப்பிள்ளை வல்லிபுரம்.
376.யா/உ/ 7029திரு. தம்பிப்பிள்ளை மாணிக்கவாசகர்.
377.யா/உ/ 7030திரு. முருகேசு சின்னையா.
378.யா/உ/ 7096திரு. ஐயம்பிள்ளை நவரத்தினம்.
379.யா/உ/ 7100திருமதி. தெய்வானைப்பிள்ளை சண்முகநாதன்.
380.யா/உ/ 7174திரு. முருகன் வைத்தியன்.
381.யா/உ/ 7181திரு. நாகநாதர் வேலாயுதபிள்ளை.
382.யா/உ/ 7207திருமதி. இராஜேஸ்வரி செல்வராசா.
383.யா/உ/ 7237திருமதி. இராசம்மா மரியாம்பிள்ளை.

## சாவகச்சேரி உதவி அரச அதிபர் பிரிவு

001 யா/சா/ 1 திரு. பெரியதம்பி இராசரத்தினம்.
002 யா/சா/ 8 திரு. மதவீரசிங்கம் கதிரித்தம்பி.
003 யா/சா/ 17 திருமதி. தங்கரத்தினம் சிவஞானம்.
004 யா/சா/ 23 திரு. தம்பு தியாகராஜா.
005 யா/சா/ 29 திரு. பொன்னம்பலம் சுப்பையா.
006 யா/சா/ 50 திரு. சின்னத்தம்பர் தில்லைநாதன்.
007 யா/சா/ 62 திருமதி. மங்கையற்கரசி சிவபர்தசுந்தரம்.
008 யா/சா/ 67 திரு. பொன்னையா சிவகுரு.
009 யா/சா/ 70 திரு. அச்சலிங்கம் கந்தையா.
010 யா/சா/ 75 திரு. சின்னையா சின்னத்தம்பி.
011 யா/சா/ 83 திரு. குமாரவேலு காசிப்பிள்ளை.
012 யா/சா/ 96 திரு. நாகநாதர் நவரத்தினம்.
013 யா/சா/ 101 திரு. சின்னப்பா மார்க்கண்டு.
014 யா/சா/ 105 திரு. இளையப்பா காசிப்பிள்ளை.
015 யா/சா/ 112 திரு. கணபதிப்பிள்ளை வீரசிங்கம்.
016 யா/சா/ 119 திரு. கறுவல் நாகன்.
017 யா/சா/ 141 திரு. சுப்பிரமணியம் சிவயோகநாதன்.
018 யா/சா/ 177 திரு. கந்தையா நடராசா.
019 யா/சா/ 195 திரு. முருகன் கனகையா.
020 யா/சா/ 204 திரு. அப்புப்பிள்ளை சின்னையா.
021 யா/சா/ 208 திருமதி. முத்தம்மா சின்னத்துரை.
022 யா/சா/ 209 திரு. சுப்பர் மயில்வாகனம்.
023 யா/சா/ 211 திருமதி. இலட்சுமி பரமு.
024 யா/சா/ 213 திரு. கதிரவேலு நல்லையா.
025 யா/சா/ 224 திரு. செல்லப்பா கார்த்திகேசர்.
026 யா/சா/ 230 திரு. பசுபதி குழந்தைவேலு.
027 யா/சா/ 247 திரு. கதிரவேலு கந்தையா.
028 யா/சா/ 250 திரு. வல்லிபுரம் செல்லையா.
029 யா/சா/ 252 திரு. வல்லிபுரம் செல்லையா.
030 யா/சா/ 269 திரு. கதிரவேலு நல்லையா.
031 யா/சா/ 273 திரு. சடையர் ஆறுமுகம்.
032 யா/சா/ 275 திரு. சிதம்பரப்பிள்ளை சோமநாதர்.
033 யா/சா/ 280 திருமதி. இலட்சுமிப்பிள்ளை வீரசிங்கம்.
034 யா/சா/ 288 திரு. செல்லையா .சின்னத்துரை.
035 யா/சா/ 305 திரு. செல்லையா சின்னத்துரை.
036 யா/சா/ 312 திரு. சேதுகாவலர் சங்கரப்பிள்ளை.
037 யா/சா/ 327 திரு. வேலாயுதர் கதிர்காமு.
038 யா/சா/ 333 திரு. காசிப்பிள்ளை ஆறுமுகம்.
039 யா/சா/ 340 திருமதி. தங்கம்மா சின்னத்தம்பி.
040 யா/சா/ 359 திருமதி. சிவபாக்கியம் சோமசுந்தரம்.
041 யா/சா/ 374 திரு. சுப்பிரமணியம் பொன்னம்பலம்.
042 யா/சா/ 380 திரு. பொன்னையா தன்மாவரதர்.
043 யா/சா/ 406 திரு. சுப்பிரமணியம் கனகசபாபதி.
044 யா/சா/ 407 திரு. சுப்பிரமணியம் கனகசபாபதி.
045 யா/சா/ 416 திரு. சங்கிலியன் இராமு.
046 யா/சா/ 425 திரு. சின்னப்பா செல்லத்துரை.
047 யா/சா/ 428 திருமதி. சின்னன் ஏரம்பு.
048 யா/சா/ 437 திருமதி. அன்னம்மா அம்பலவாணர்.
49 யா/சா/ 441 திரு. நடராசா கந்தையா.
050 யா/சா/ 458 திரு. கந்தர் சிவஞானம்.
051 யா/சா/ 465 திரு. தம்பாபிள்ளை வன்னியசிங்கம்.
052 யா/சா/ 466 திரு. கதிர்காமு வெற்றிவேலு.

# ன் மீளளிப்பு - 2005

053 யா/சா/ 468 திரு. கந்தையா துரை.
054 யா/சா/ 485 திருமதி. பரிமளம் கனகசபை.
055 யா/சா/ 489 திரு. சுப்பையா கந்தசாமி.
056 யா/சா/ 491 திரு. சின்னையா திசைவீரசிங்கம்.
057 யா/சா/ 502 திரு. பகவான் நித்தியானந்தன்.
058 யா/சா/ 505 திரு. வேதலிங்கம் தம்பித்துரை.
059 யா/சா/ 507 திரு. மார்க்கண்டு சுப்பிரமணியம்.
060 யா/சா/ 520 திருமதி. இராசமணி துரைசாமி.
061 யா/சா/ 529 திரு. செல்லையா திருநாவுக்கரசு.
062 யா/சா/ 541 திரு. ஐயாத்துரைஐயர் ஞானசர்மா.
063 யா/சா/ 547 திருமதி. அபிராமி பாலசிங்கம்.
064 யா/சா/ 559 திரு. கார்த்திகேசு கனகராசா.
065 யா/சா/ 598 திருமதி. யோகாம்பிகை தவரத்தினம்.
066 யா/சா/ 622 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை.
067 யா/சா/ 625 திரு. சபாபதிப்பிள்ளை கோபால்கிருஸ்ணன்.
068 யா/சா/ 626 திரு. கார்த்திகேசு சதாசிவம்.
069 யா/சா/ 627 திரு. கந்தையா கனகரத்தினம்.
070 யா/சா/ 632 திரு. கந்தையா பொன்னையா.
071 யா/சா/ 684 திருமதி. செல்லம்மா பொன்னன்.
072 யா/சா/ 686 திருமதி. சரஸ்வதி சிவஞானசுந்தரம்.
073 யா/சா/ 700 திருமதி. சின்னப்பிள்ளை சின்னத்தம்பி.
074 யா/சா/ 701 திரு. சின்னத்துரை இரத்தினம்.
075 யா/சா/ 702 திருமதி. சின்னப்பிள்ளை சின்னத்தம்பி.
076 யா/சா/ 705 திரு. சிதம்பரப்பிள்ளை வேலுப்பிள்ளை.
077 யா/சா/ 755 திரு. வைரமுத்து பொன்னுத்துரை.
078 யா/சா/ 756 திரு. வேலாயுதம்பிள்ளை திருநாவுக்கரசு .
079 யா/சா/ 779 திருமதி. பொன்னி முருகன்.
080 யா/சா/ 796 திரு. சாணையன் பொன்னையா.
081 யா/சா/ 797 திரு. சாணையன் பொன்னையா.
082 யா/சா/ 800 திரு. வயிரமுத்து பொன்னுத்துரை.
083 யா/சா/ 805 திருமதி. சரஸ்வதி ஐயாத்துரை.
084 யா/சா/ 819 திரு. சுப்பிரமணியக்குருக்கள் நடராசக்குருக்கள்.
085 யா/சா/ 828 திரு. கணபதிப்பிள்ளை சின்னப்பு.
086 யா/சா/ 829 திரு. நல்லசேகரம்பிள்ளை பரமசாமி.
087 யா/சா/ 833 திரு. தம்பையா இளையதம்பி.
088 யா/சா/ 838 திருமதி. மகேஸ்வரி காசிநாதர்.
089 யா/சா/ 839 திரு. முத்துக்குமாரு பொன்னுச்சாமி.
090 யா/சா/ 845 திரு. தம்பிப்பிள்ளை இராமச்சந்திரன்.
091 யா/சா/ 868 திரு. வல்லி கந்தன்.
092 யா/சா/ 869 திருமதி. பாக்கியம் நவரத்தினம்.
093 யா/சா/ 872 திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்.
094 யா/சா/ 875 திருமதி. பரமேஸ்வரி விஸ்வநாதன்.
095 யா/சா/ 910 திரு. சின்னத்தம்பி வைரவிப்பிள்ளை.
096 யா/சா/ 911 திரு. வீரகத்தி முத்திலிங்கம்.
097 யா/சா/ 918 செல்வி. திலகவதி தியாகராசா.
098 யா/சா/ 920 திரு. கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்.
099 யா/சா/ 933 திரு. கதிரர் கிருஷ்ணபிள்ளை.
100 யா/சா/ 940 திரு. தம்பு நடராசா.
101 யா/சா/ 941 திரு. கந்தன் சின்னத்தம்பி.
102 யா/சா/ 947 திருமதி. தங்கரத்தினம் சபாரத்தினம்.
103 யா/சா/ 952 திருமதி. இராசாம்பாள் பொன்னுச்சாமி.
104 யா/சா/ 961 திரு. நல்லசேகரம்பிள்ளை நடராசா.
105 யா/சா/ 962 திரு. மாணிக்கம் தம்பிமுத்து.
106 யா/சா/ 977 திரு. கந்தன் முருகேசு.
107 யா/சா/ 995 திரு. கதிரன் சோமு.
108 யா/சா/ 1011 திரு. வேலுப்பிள்ளை மார்க்கண்டு.
109 யா/சா/ 1017 திரு. ஆறுமுகம் நமசிவாயம்.
110 யா/சா/ 1020 திரு. சரவணமுத்து தியாகராசா.
111 யா/சா/ 1027 திரு. நிர்சிங்கர் ஆறுமுகம்.
112 யா/சா/ 1030 திரு. சின்னவன் ஆறுமுகம்.
113 யா/சா/ 1045 திரு. அருணாசலம் கந்தையா.
114 யா/சா/ 1046 திரு. நாகமணி கனகரத்தினம்.
115 யா/சா/ 1048 திரு. தில்லைநாதர் சுப்பிரமணியம்.
116 யா/சா/ 1061 திருமதி. சாந்தம்மா சுப்பிரமணியம்.
117 யா/சா/ 1066 திரு. சின்னப்பு குமாரசாமி.
118 யா/சா/ 1087 திரு. அருணாசலம் குமாரவேலு.
119 யா/சா/ 1092 திருமதி. அன்னம்மா விசுவலிங்கம்.
120 யா/சா/ 1105 திரு. முருகுப்பிள்ளை தம்பையா.
121 யா/சா/ 1106 திரு. தில்லையம்பலம் மகேசன்.
122 யா/சா/ 1120 திரு. பேதுரு பிலிப்ஸ்.
123 யா/சா/ 1122 திரு. சிதம்பரப்பிள்ளை நாகலிங்கம்.
124 யா/சா/ 1124 திரு. முருகேசு சண்முகம்.
125 யா/சா/ 1136 திரு. கதிரேசு மாணிக்கம்.
126 யா/சா/ 1147 திரு. பேதுறு எட்வேட்.
127 யா/சா/ 1148 திரு. பேதுறு எட்வேட்.
128 யா/சா/ 1149 திருமதி. சிவக்கொழுந்து சரவணமுத்து.
129 யா/சா/ 1150 திரு. கதிரவேலு கந்தையா.
130 யா/சா/ 1160 திரு. பொன்னையா ஜெயமோகன்.
131 யா/சா/ 1166 திருமதி. பாக்கியம் வல்லிபுரம்.
132 யா/சா/ 1172 திரு. சபாரத்தினம் கனகரத்தினம்.
133 யா/சா/ 1186 திரு. தம்பிப்பிள்ளை அருணாசலம்.
134 யா/சா/ 1190 திரு. அப்பாபிள்ளை நடராசா.
135 யா/சா/ 1196 திரு. தம்பிப்பிள்ளை தியாகராசா.
136 யா/சா/ 1199 திரு. வேதவனம் கதிரேசு.
137 யா/சா/ 1202 திரு. கதிரவேலு கந்தையா.
138 யா/சா/ 1209 திரு. இராசக்கோன் குழந்தைவேலு.
139 யா/சா/ 1218 திரு. கந்தையா துரைராசா.
140 யா/சா/ 1226 திரு. பேதுறு பிலிப்ஸ்.
141 யா/சா/ 1227 திரு. பேதுறு பிலிப்ஸ்.
142 யா/சா/ 1237 திரு. கதிர்காமர் கந்தையா.
143 யா/சா/ 1248 திரு. வேதவனம் தம்பு.
144 யா/சா/ 1255 திருமதி. ஜெயலட்சுமி குழந்தைவேலு.
145 யா/சா/ 1260 திரு. மயில்வாகனம் சிதம்பரநாதன்.
146 யா/சா/ 1261 திரு. சுந்தரமூர்த்தி சிவானந்தன்.
147 யா/சா/ 1264 திரு. கணபதிப்பிள்ளை இராசதுரை.
148 யா/சா/ 1273 திரு. கந்ததாசகுருக்கள் சிவராசசர்மா.
149 யா/சா/ 1274 திரு. கந்தையா பொன்னுத்துரை.
150 யா/சா/ 1275 திரு. கணபதிப்பிள்ளை வல்லிபுரம் நாகராசா.
151 யா/சா/ 1290 திரு. கந்தையா கணேசலிங்கம்.
152 யா/சா/ 1303 திரு. வினாசித்தம்பி சுப்பிரமணியம்.
153 யா/சா/ 1313 திருமதி. நாகம்மை தம்பிரத்தினம்.
154 யா/சா/ 1338 திருமதி. விசாலாட்சி நடராசா.
155 யா/சா/ 1351 திருமதி. செல்வி தம்பையா.
156 யா/சா/ 1357 திருமதி. தங்கம்மா நாகராசா.
157 யா/சா/ 1361 திரு. ஆறுமுகம் வல்லிபுரம்.
158 யா/சா/ 1365 திரு. ஆறுமுகம் கார்த்திகேசு.
159 யா/சா/ 1370 திரு. செல்லப்பா இராமலிங்கம்.
160 யா/சா/ 1371 திருமதி. சிவக்கொழுந்து சிவப்பிரகாசம்.
161 யா/சா/ 1391 திருமதி. அன்னபூரணம் சுப்பிரமணியம்.
162 யா/சா/ 1395 திரு. சரவணை சின்னத்துரை.
163 யா/சா/ 1397 திரு. ஆறுமுகம் நமசிவாயம்.
164 யா/சா/ 1401 திரு. பரமு இராசரத்தினம்.
165 யா/சா/ 1409 திருமதி. தையல்நாயகி மாணிக்கவாசகர்.
166 யா/சா/ 1410 திருமதி. நாகம்மா கந்தையா.
167 யா/சா/ 1427 திருமதி. செல்வரத்தினம் இராசஇரத்தினம்.
168 யா/சா/ 1435 திரு. அருணாசலம் சின்னத்தம்பி பொன்னுச்சாமி.
169 யா/சா/ 1439 திரு. கனகரத்தினம் இராசசிங்கம்.
170 யா/சா/ 1462 திருமதி. யோகம்மா கார்த்திகேசு.
171 யா/சா/ 1464 திரு. செல்லையா தம்பு.
172 யா/சா/ 1477 திரு. இராமலிங்கம் தேவராசா.
173 யா/சா/ 1479 திரு. சின்னத்தம்பி ஐயம்பிள்ளை.
174 யா/சா/ 1480 திரு. செல்லையா குமாரசாமி.
175 யா/சா/ 1486 திரு. அப்பாத்துரை தனபாலசிங்கம்.
176 யா/சா/ 1494 திருமதி. அன்னமுத்து சின்னத்தம்பி.
177 யா/சா/ 1495 திரு. கார்த்திகேசு பொன்னம்பலம்.
178 யா/சா/ 1513 திரு. வினாசித்தம்பி செல்லையா.
179 யா/சா/ 1517 திரு. காசித்தம்பி படைவீரசிங்கம்.
180 யா/சா/ 1524 திரு. கதிராமு சின்னத்தம்பி.
181 யா/சா/ 1531 திரு. கந்தையா குமாரசாமி.
182 யா/சா/ 1534 திரு. வேலுப்பிள்ளை வாரித்தம்பி.
183 யா/சா/ 1541 திரு. வல்லிபுரம் விக்கினேஸ்வரன்.
184 யா/சா/ 1545 திரு. கந்தையா தங்கராசா.
185 யா/சா/ 1560 திரு. சின்னப்பு இராசையா.
186 யா/சா/ 1564 திரு. செல்லையா இளையதம்பி.
187 யா/சா/ 1569 திரு. குமரையா படைவீரசிங்கம்.
188 யா/சா/ 1575 திருமதி. இராசம்மா பொன்னம்பலம்.
189 யா/சா/ 1578 திரு. காசிப்பிள்ளை யோகநாதன்.
190 யா/சா/ 1589 திருமதி. புளோறா புஸ்பராணி சாமுவேல்.
191 யா/சா/ 1603 திருமதி. நல்லம்மா தம்பிராசா.
192 யா/சா/ 1608 திரு. செல்லையா மயில்வாகனம்.
193 யா/சா/ 1624 திரு. சின்னத்தம்பி சுப்பிரமணியம்.
194 யா/சா/ 1626 செல்வி. சத்தியதேவி பொன்னையா.
195 யா/சா/ 1627 திரு. சின்னத்துரை தியாகராசா.
196 யா/சா/ 1635 திருமதி. இரத்தினபூபதி நடராஜா.
197 யா/சா/ 1640 திருமதி. சோதிமலர் நடேஸ்வரன்.
198 யா/சா/ 1642 திருமதி. புவனேஸ்வரி இராமநாதன்.
199 யா/சா/ 1643 திரு. மாணிக்கம் சந்திரன்.
200 யா/சா/ 1645 திருமதி. மனோன்மணி முருகேசு.
201 யா/சா/ 1653 திரு. செல்லையா நடராசா.
202 யா/சா/ 1676 திருமதி. மகேஸ்வரி காசிநாதர்.
203 யா/சா/ 1679 திரு. மாணிக்கம் சதாசிவம்.
204 யா/சா/ 1681 திருமதி. கண்மணி கனகராசா.
205 யா/சா/ 1683 திரு. கந்தையா விசுவலிங்கம்.
206 யா/சா/ 1695 திரு. வேலுப்பிள்ளை தியாகராஜா.
207 யா/சா/ 1699 திரு. சின்னத்தம்பி செல்லையா.
208 யா/சா/ 1701 திரு. குலநாயகம் பசுபதிப்பிள்ளை.
209 யா/சா/ 1702 திருமதி. செல்வமணி பேரம்பலம்.
210 யா/சா/ 1712 திருமதி. நவமணி வல்லிபுரம்.
211 யா/சா/ 1715 திரு. சரவணமுத்து பாலசிங்கம்.
212 யா/சா/ 1717 திரு. செல்லமுத்து நமச்சிவாயம் குருசாமி.
213 யா/சா/ 1723 திரு. சோமசுந்தரம் சண்முகராசா.

(தொடரும்)

# கொழும்பு கம்பன்கழகத்தின் 'இசைவேள்வி' ஒக்.29 - நவ.5 வரை சிறப்புற நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பு கம்பன் கழகம் ஆண்டுதோறும் நடாத்திவரும் முத்தமிழ் விழாக்களின் வரிசையில் இவ்வாண்டு 'ஸ்ரீராமநாம கானாமிர்தம்' என்னும் பெயரிலான இசை வேள்வியை எதிர்வரும் 29ஆம் திகதி முதல் நவம்பர் மாதம் 5ஆம் திகதி வரையிலான எட்டு நாட்களும் மிகச் சிறப்பான முறையில் நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் தினமும மாலை 5 மணி தொடக்கம் இவ்விழா நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.கொழும்பு கம்பன் கழகத் தலைவரும் மொறிஸியஸ் நாட்டின் இலங்கைககான பிரதிநிதியுமான தெ.ஈஸ்வரன் தம்பதியினர் மங்கல விளக்கேற்றியும், கொழும்புக் கம்பன்கழகப் பெருந்தலைவரும், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதியரசருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையுரையாற்றியும் 29ஆம் திகதி சனிக்கிழமை மாலை நிகழ்வை ஆரம்பித்துவைக்கவுள்ளனர்.

ஈழத்தின் பிரபல நாதஸ்வர இசைக் கலைஞரான பி.நாகேந்திரம் ஆர்.வி.எஸ் கணேசமூர்த்தி ஆகியோர் இணைந்து வழங்கும் மங்கல இசை நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகும். இவ்விழாவில் ஈழத்தின் மூத்த இளைய இசைக்கலைஞர்களும், தமிழகத்தின் பிரபல இசைக் கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

தமிழகத்திலிருந்து மிகப் பிரபலமான கலைஞர்களான ரி.எம்.கிருஷ்ணா, மதுரை ரி.என்.சேஷகோபாலன், ரி.வி.சங்கரநாராயணன், நெய்வேலி சந்தானகோபாலன், திருமதி சுதா இரகுநாதன், திருமதி பம்பாய் ஜெயஸ்ரீ, திருமதி குலபூசனி கல்யாணராமன், க்த்ரி கோபால்நாத், திருமதி கன்னியாகுமரி முதலியோர் இவ்விழாவில் பங்கேற்கவுள்ளனர்.

நம் நாட்டைச் சேர்ந்த சிறந்த இசைக் கலைஞர்களுள் ஒருவரான பொன். வாமதேவன், இளைய கலைஞர்களான சி.அகிலன், ரி.கருணாகரன், செல்வி யதுநந்தினி இராமநாதன், செல்வி துஷாந்தி மழவராயன், ஸ்ரீநந்தகோபன், அ.ஆருரன், ஆகியோரும் இவ்விழா நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்கவுள்ளனர்.

ஈழத்திற்கென்று பல நூற்றாண்டுகளாக தரமான இசை மரபு நின்று நிலவி வருகிறது. இவ்விசைமரபினைத் தொடர்ந்து பேணவும் மேலும் வளர்த்தெடுக்கவும் கொழும்புக் கம்பன்கழகம் முயன்று வருகின்றது. ஒரு காலத்தில் ஈழத்திலிருந்து பெருமளவிலான வசதி படைத்த இசையார்வலர்களும், இசைக் கலைஞர்களும், தமிழகத் தலைநகரான சென்னையில் ஒவ்வோர் ஆண்டும் மார்கழி மாதத்தில் நடைபெறும் இசை விழாக்களைக் காணச் செல்வது வழக்கமாய் இருந்தது. வசதியற்ற திறமை மிகுந்த பல கலைஞர்களுக்கு இவ்வாய்ப்பு எட்டாக்கனியாகவே இருந்து வந்தது. வானொலி மூலமோ வேறு ஊடகங்களின் மூலமோ அக்கச்சேரிகளில் ஒரு சில பகுதிகளை மாத்திரம் கேட்கும் வாய்ப்பினையே அவர்களால் பெறமுடிந்தது. நம்மண்ணில் வாழும் இசைத்துறை சார்ந்த அனைவருக்கும் ஒரு தரமாவது டிசம்பர் 'மியூசிக் சீஷனில்' சென்னை சென்று வரவேண்டும் என்பது இலட்சியக் கனவாகவே இருந்தது.

ஆயிரக்கணக்கான அவ்விசை இரசிகர்களின் கனவை நனவாக்கும் நோக்குடன் கொழும்புக் கம்பன் கழகம் ஒவ்வொரு நவம்பர் மாதத்திலும் தலைநகர் கொழும்பில் சென்னை இசைவிழாக்களுக்குச் சமமான முறையில் மிகப்பெருமளவில் கடந்த சில ஆண்டுகளாக 'ஸ்ரீராமநாமகானமிர்தம்' எனனும் பெயரிலான இசை வேள்வியை நடாத்தி வருகிறது. ஈழத்தின் நவம்பர் 'மியூசிக் சீஷனுக்காக' தற்போது வெளிநாட்டிலிருந்தும் பார்வையாளர்கள் வரத்தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்க ஓர் வளர்ச்சி.

ஆரம்பகாலத்தில் இவ்விசைவேள்வியில் ஒரு சில இந்தியக் கலைஞர்களே பங்கேற்றனர். பங்கேற்ற அவ்விசைக்கலைஞர்கள் நம் இசை இரசிகர்களின் ஆர்வத்தினையும், இங்கு நடைபெறும் இசைவேள்வியின் சிறப்பினையும், தமிழகத்தின் மற்றைய கலைஞர்களுக்கும் எடுத்துச் சொன்னதால் இன்று தமிழகத்தின் பல பிரபல இசைக்கலைஞர்களும் இவ்விசைவிழாவில் கலந்துகொள்ள தாமாக மனமுவந்து முன்வருகின்றனர்.

கொழும்பு இசைவேள்வியில் கலந்துகொள்வதை ஓர் கௌரவமாய்க் கருதும் மனநிலை தமிழகத்திலும் பரவியிருப்பது நம் ஈழ இசையுலகிற்கு கிடைத்த ஓர் மிகப் பெரும் வெற்றியே! அவ்வடிப்படையில் இவ்வாண்டு தமிழகத்தின் மிகப் பிரபலமான ஒன்பது இசைக்கலைஞர்கள் விழாவில் பங்கேற்கவுள்ளனர். தினமும் விழா நிகழ்ச்சிகளில் ஒரு ஈழத்து இசைக்கலைஞரின் கச்சேரியும், ஒரு தமிழக இசைக்கலைஞரின் கச்சேரியும் நடைபெறவுள்ளது.

தமிழ் நாட்டிலிருந்து வருகை தர இருக்கின்ற வயலின் வித்துவான் பி.யு.கணேஷ் பிரசாத், மிருதங்க வித்துவான் என்.மனேஜ் சிவா், கெஞ்சிரா வித்துவான் எஸ்.புருஷோத்தமன் ஆகியோரும் நம்நாட்டைச் சேர்ந்த அ.ரகுநாதன், வி.ஜம்புநாதன், வை.வேனிலான், எஸ்.திபாகரன், ம.விஸ்வமூர்த்தி, கே.குகபரன், டானியல் வரதராஜன், பி.பத்மலதன், மெட்ராஸ் கஜன், வ.ரமணர், மா.கேசவன், என்.மாதவன், கிருபா. அனந்தகோபன் ஆகியோரும் இவ்வாண்டு நடைபெறவுள்ள இசை அரங்குகளை அணிசெய்யவுள்ளனர்.

இவ்வாண்டு இசைவேள்வியில் அப்பலோ வைத்தியசாலை வைத்திய நிபுணர் ச.சாண்டில்யா, இலண்டனில் வதியும் புகழ்பூத்த வைத்திய நிபுணர் சீ.நவரத்தினம், ரூபவாஹினி கூட்டுத்தாபன ஆலோசகர் வி.ஏ. திருஞானசுந்தரம், புகழ்பெற்ற சட்டத்தரணி எஸ்.செந்தில்நாதன், ஈழத்தின் மூத்த இசைக் கலைஞரும் இராமநாதன் நுண்கலைப் பீட விரிவுரையாளருமான கே.ராமநாதன், உதவிச் சுங்கப் பணிப்பாளர் பூ.யோகநாதன், கல்கிசை பிராந்திய பொலிஸ் அதிபர் கே.அரசரத்தினம் ஆகியோர் தினமும் தொடக்கவுரையாற்றவுள்ளனர்.

மா.தவயோகராஜா தம்பதியர், வெள்ளவத்தை நித்தியகல்யாணி ஜுவலர்ஸ் நிறுவன பங்காளர் வை.பெரியசுவாமி தம்பதியர், ஓய்வுபெற்ற சுங்கத் திணைக்களப் பணிப்பாளர் திரு.எஸ்.இராமச்சந்திரன் தம்பதியர், கொழும்பு ஸ்ரீசத்ய சாயி சேவா சமித்தித் தலைவர் சட்டத்தரணி ராம் பாலசுப்பிரமணியம் தம்பதியர், ஒறியன்ற் ரேடிங் நிறுவன அதிபர் எஸ்.கணபதிப்பிள்ளை தம்பதியர், வட கொழும்பு இந்து பரிபாலன சபை உப தலைவர் வி.நாகதேவன் தம்பதியர், நீர் கொழுமபு இந்து இளைஞர் மன்றத் தலைவர் பொ.ஜெயராமன் தம்பதியர் ஆகியோர் தினமும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைக்கவுள்ளனர்.



எண்பது அகவை நிறைந்து இன்றும் இசைவழங்கி வருகின்ற நம்நாட்டின் மூத்த இசைக்கலைஞரான நாதஸ்வரமேதை இசைப் பேரறிஞர் எம்.பஞ்சாபிகேஷன் இவ்விசை வேள்வியில் கௌரவிக்கப்படவுள்ளார்.

அத்தோடு இவ்விசை வேள்வியின் அஞ்சலி அரங்கில் மறைந்த உலக சங்கீதமேதை எம்.எஸ்.சுப்புலட்சுமி மற்றும் கடல்கோளினால் உயிரிழந்த நம்நாட்டு இசைக்கலைஞர் ஜனதா பராபரன் மற்றும் நம்நாட்டின் இளம் நாதஸ்வர வித்வான் பி.சுதாகரன் ஆகியோருக்கான படத்திறப்பும், அஞ்சலியும் நடைபெறவுள்ளன.

உலகெங்கும் இன்று பஞ்சபூதங்களின் கொடூர தாண்டவத்தால் அதிர்ந்து கிடக்கிறது. இயற்கையின் சீற்றத்தால் மக்கள் பெருந்துன்பம் அடைந்துவருகின்றனர். விஞ்ஞானிகளும் இப்பாரிய அழிவுகளை அடக்கும் வழி தெரியாது அதிர்ந்து நிற்கின்றனர். இந்நிலையில் பாரம்பரிய இசையால் பஞ்ச பூதங்களையும் ஆட்சி செய்து இவ்வுலகை பேரழிவிலிருந்து காக்கமுடியமென பெரியோர்கள் நம்புகின்றனர்.

இன்று தமிழ் உலகின் தலைசிறந்த இசைக்கலைஞர்கள் பலரும் கலந்து சிறப்பிக்கும் இவ்விசை வேள்வியால் உலகம் அமைதியுறும் என உறுதியாய் நம்பலாம்.

இவ்விழா நிகழ்ச்சிகள் அனைத்தும் எதுவித கட்டணமுமின்றி இலவசமாகவே நடத்தப்படுகின்றது கழகத்தின் இத்தகு முயற்சிகளை நிதிமிகுந்த தாழ்விலாச் செல்வர்கள் ஊக்குவிக்கவேண்டும் எனவும், இரசிகர்கள் வழமைபோலவே விழா நிகழ்ச்சிகளில் குறித்த நேரத்தில் கலந்துகொண்டு இவ்விசை வேள்வியால் பயன்கொள்ள வேண்டுமெனவும் கொழும்புக் கம்பன்கழகம் கேட்டுள்ளது. (ற)

## கூட்டம்

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்த கூட்டம் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சென்ற மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் பற்றியும், வருடாந்த பொதுக் கூட்டம் பற்றியும் ஆராயப்படவுள்ளது.

ஆகவே இக் கூட்டத்தில் சகல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் கலந்துகொள்ளுமாறு இணையச் செயலாளர் தேவானந் கேட்டுள்ளார். (ந-74)

## வாய்ப்புற்றுநோய் பரிசோதனை

(பொன்னாலை)

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்புற்றுநோய்ப் பரிசோதனைகள் எதிர்வரும் 29,30 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இப்பிரதேசங்களைச் சேர்ந்த 50 வயதுக்கு மேற்பட்ட இருபாலருக்கும் வாய்ப்புற்றுநோய் அறிகுறிகள் இருக்கின்றதா? என்பதை அறியும் சோதனைகள் நடைபெறவுள்ளன.

இம்மாதம் 29ஆம் திகதி சனிக்கிழமை சங்கானை பிரதேசத்திலும், 30ஆம் திகதி சண்டிலிப்பாய் பிரதேசத்திலும் இச்சோதனைகள் நடைபெறவிருக்கின்றன.

இவ்விரு பிரதேசங்களுக்கும் உட்பட்ட அரசினர் வைத்தியசாலைகள், சன சமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மற்றும் பொது இடங்களிலும் இந்தப் பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன. (ந-49)

## கௌரவிப்பு வைபவம்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் எதிர்வரும் 29ஆம் திகதி ஓய்வு பெறுகிறார்.

இவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிக்கும் முகமாக, வலய ஊழியர் நலன்புரி கழகத்தினர் பிரியாவிடை வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளனர்.

நலன்புரிக் கழகத் தலைவரும், உதவிக் கல்விப் பணிப்பாளருமான செ.உதயகுமார் தலைமையில் இவ்வைபவம் வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆசிரியராக, பின் அதிபராக, உதவி கல்விப் பணிப்பாளராக, கோட்டக் கல்வி அதிகாரியாக, பிரதிக்கல்விப்பணிப்பாளராக, கல்விப்பணிப்பாளராக இவர் தமது கடமைகளை நிறைவேற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-108)

## நியமனம்

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சிததிணைக்களத்தின் கருத்திட்டப் பணிப்பாளராக செ.சரவணபவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்னர் சாவகச்சேரி நகரசபை, வவுனியா நகரசபை என்பவற்றின் செயலாளராகக் கடமையாற்றியவர். இலங்கை நிர்வாக சேவையில் பரீட்சையில் சித்தியடைந்தமையினால் இவரிற்கான பொது நியமனம் நிர்வாக அமைச்சினால் வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-47)

## இயேசு சபை அகதிப் பணியினரின் யூபிலி நிகழ்வு வவு.இல் இடம்பெற்றது

(சாவகச்சேரி)

இலங்கையின் 'இயேசு சபை அகதிப் பணி' அமைப்பினரின் சேவையில் 25வது ஆண்டு நிறைவு பூர்த்தியை முன்னிட்டு இதன் யூபிலி நிகழ்வு இம்மாதம் 16,17 ஆம் திகதிகளில் வவுனியா றம்பைக்குளத்தில் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

இயேசு சபை அகதிப்பணி அமைப்பினரின கீழ் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, திருகோணமலை, காலி, மட்டக்களப்பு, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள முன்பள்ளிகளின் ஆசிரியர்களும், மாவட்ட ரீதியில் போட்டியில் பங்குபற்றி தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும், மற்றும் நிர்வாக உத்தியோகத்தர்களும் பங்கு பற்றினர்.

இந்நிகழ்வில் முதனமை விருநதினர்களாக மன்னார் அதிபர் அதி.வண ஜோசேப் இராயப்பு ஆண்டகை, தெற்காசியாவுக்கான இயேசு சபை அகதிப்பணி இயக்குநர் அருட திரு பி.எஸ்.அமல்ராஜ, பர்மாவுககான இயேசு சபை அகதிப்பணி இயக்குநர் அருட திரு சி.அமல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஆயர் தலைமையில் அங்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மாவட்ட ரீதியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு தேசிய ரீதியில் போட்டி நடாத்தப்பட்டு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. சர்வதேச இயேசுசபை அகதிப்பணி றோம் இணைப்பாளர் செலலியா பொக வவுனியா இராணுவத் தளபதி வீரக்கோன் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர். (ந-108)

## உலக வங்கியின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் 4000 வீடுகள்

யாழ்- மாவட்டத்தில் உலக வங்கியின் அனுசரணையுடன் நிர்மாணிக்கப்பட்வுள்ள இரண்டாம் கட்ட வீட்டுத்திட்டத்திற்கு கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கட்பட்டுள்ளதாக யாழ்-செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யாழ் - மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும், கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வருடம் உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ் -மாவட்டத்தில் 1635 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அடுத்த வருடம் 4000 வீடுகள் நிமாணிக்கப்படவிருக்கின்றன என்றும் அதற்கான கிராமங்களைத் தேர்வு செய்யும் பணிகளே தற்சமயம் இடம்பெற்றுவருவதாகவும் தெரிய வருகிறது. (த-49)

## திடீர் மரண விசாரணை அதிகாரியை நியமிக்குமாறு மக்கள் கோரிக்கை

(பொன்னாலை)

வலிகாமம் மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கும என வலி -மேற்கு பிரிவு மக்கள் சார்பாக அப்பகுதி பொது அமைப்பக்கள் பலவும் பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகவும வலி-மேற்கு பிரதேசத்தில் வெற்றிகரமாக இருந்து வரும் திடீர் மரண விசாரணை அதிகாரி பதவிக்கு ஒருவரை நியமிப்பதன மூலம், இப்பகுதியில் ஏற்படும் திடீர் மரணங்களை விசாரிக்க முடியும் என்றும சுட்டிக் காட்டப்பட்டது.

இப்பகுதியில் திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் இல்லாததால் திடீர் மரணங்கள் ஏற்படுகின்ற பொழுது, அப்பகுதி மக்கள பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-49)

## கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் பொப்லெப் செயற்திட்டத்திற்கு பொறுப்பான ஆசிரியர்களுககான கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை 12 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் தரம் 4 இல் ஆங்கிலம் கற்பிக்கும ஆசிரியர்கள் தவறாது கலந்துகொள்ளும்படி தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார். (ந-108)


# சச்சின் 28

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

பிரிஸ்பேனிலும், மெல்பொர்னிலும் நடைபெற்ற இரு டெஸ்டுகளிலும் இந்தியா தோல் வியுற்றது. இரண்டிலும் சச்சின் சரியாக விளையாடவில்லை. 1992ஆம் ஆண்டின் முதல் ஆட்டமாக ஜனவரி இரண்டாம் திகதி சிட்னியில் மூன்றாவது டெஸ்ட் போட்டி தொடங் கியது. அதுவரை சச்சினின் சுமாரான ஆட்டங்களையே பார்த்து வந்த ஆஸ்திரேலிய



ரசிகர்களுக்கு நிஜமான 'சச்சின்' கம்பீரமாகக் காட்சிகொடுத்த போட்டி அது. நல்ல திறமை எங்கிருந் தாலும் ரசிக்கிற ஆஸ்திரேலிய ரசிகர் கள், அந்தப் போட்டியில் சச்சினின் துள்ளலான ஆட்டத்தைப் பார்த்த பிறகு, திறமை மிக்க அந்த இளைஞ னைத் தங்களில் ஒருவனாக நினைத்து, கொண்டாடத் தொடங்கி னார்கள். அந்த ஆராதனையும் ஆதர வும் நேசமும் இன்றுவரை தொடர் கிறது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக சச்சினுக்கு அதிக ரசிகர்கள் இருப் பது ஆஸ்திரேலியாவில் தான்!

சிட்னி போட்டியில் முதலாவதாக ஆடிய ஆஸ்திரேலிய அணி 319 ரன்களில் ஆட்ட மிழந்தது. தொடர்ந்து ஆடிய இந்தியாவின் துவக்க ஆட்டக்காரர் சித்து சீக்கிரமே ஆட்டம் இழந்தபோதும் ரவி சாஸ்திரி, மஞ்ச்ரேகர், வெங்சர்கார் ஆகியோர் நிதானமாக ஸ்கோரை உயர்த்தினார்கள். அணியின் ஸ்கோர் இருநூறைத் தொட்டபோது அசாருதீன் ஆட்டமிழந்தார். ரவி சாஸ்திரியுடன் இணை சேர்ந்தான் சச்சின்!

பொறுமையின் சிகரமாகப் புகழ்பெற்றிருந்த ரவி சாஸ்திரியும், இளமைத் துடிப்போடு துறுதுறுவென்று ஆடிக்கொண்டிருந்த சச்சினும், பொருந்தாத விநோதக் கூட்டணி தான். ஆனாலும் அன்றைக்கு அந்தக் கூட்டணி தான் இந்தியாவை வெற்றிக்கு மிக அருகே அழைத்துச் சென்றது. ஒரு பக்கத்தில் ரவி சாஸ்திரி ஒற்றையும், இரட்டையுமாக ரன்கள் சேர்த்தபடி நிலைத்து நின்று ஆடிக்கொண்டிருக்க, மறுமுனையில் சச்சின் தனது வழக்கமான பாணியில் பவுலர்களை விரட்டத் தொடங்கினான். குறிப்பாக, தனது முதல் டெஸ்ட் போட்டியில் ஆடிய ஷேன் வார்னேயின் சுழற்பந்துவீச்சு, சச்சினால் பெரும் சோதனைக்குள்ளானது!

சாஸ்திரியும் சச்சினும் ஐந்தாவது விக்கெற்றுக்கு 196ரன்கள் சேர்த்தார்கள். கிட்டத் தட்ட பத்து மணிநேரம் பொறுமையோடு ஆடிய ரவி சாஸ்திரி, ஆஸ்திரேலியாவில் இரட்டை சதம் அடித்த முதல் இந்தியர் என்னும் சாதனையை நிகழ்த்தினார்!

ரவிசாஸ்திரி ஆட்டம் இழந்தபின், மனோஜ் பிரபாகருடன் இணைந்து ஸ்கோரை உயர்த்திய சச்சின், சீக்கிரமே தனது இரண்டாவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தான். அந்தப் போட்டியில் இந்தியா 483 ரன்கள் எடுத்தது, சச்சின் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 148 ரன்கள் குவித்திருந்தான்!

ஐந்துமணி நேரத்துக்கு மேல் விளையாடிய சச்சினின் அன்றைய ஆட்டம், இன்றுவரை



கிரிக்கெற் ரசிகர்களாலும் விமர்சகர் களாலும் உயர்ந்த தரத்தில் பேசப் படுகிறது. சச்சினை விட ரவி சாஸ் திரி அதிக ரன்களை எடுத்திருந்த போதும் 'தி ஏஜ்', 'தி ஆஸ்திரேலியன்' போன்ற ஆஸ்திரேலியப் பத்திரிகைகள், சச்சினின் சதத்தைத் தான் பெருமை யோடு எழுதின. 'பார்வையாளர்களை உற்சாகப்படுத்திய ஆட்டம் சச்சினு டையது' என்று வர்ணித்த இதழ்கள், 'சச்சினிடம் திறமை, பலம், நளினம் எல்லாம் இருக்கிறது. மொத்தத்தில் கச்சிதமான பேட்ஸ்மேன்' என்று புகழ்ந்தன.

அந்தப் போட்டியில் இந்தியா வெற் றிக்கு மிக அருகில் வந்தது. என்றா லும், ஆலன் பார்டரின் அனுபவமிக்க ஆட்டம் ஆஸ்திரேலியாவைக் காப்பாற்றி விட்டது!

டெஸ்ட் தொடருக்கு நடுவில் ஒருநாள் போட்டித் தொடர்களை ஏற்பாடு செய்வது ஆஸ்திரேலிய கிரிக்கெற் வாரியத்தின் விநோதமான பழக்கம். அதன்படி இந்த முறையும் இந்தியா-ஆஸ்திரேலியா-மேற்கிந்தியத்தீவு அணிகள் பங்குபெற்ற உலகத் தொடர் கோப்பை போட்டி (World Series Cup) நான்கு சுற்றுகளாக நடைபெற்றது!

சச்சினுக்கு மிகவும் வெற்றிகரமாக அமைந்த தொடர் அது. பத்துப் போட்டிகள் கொண்ட அந்தத் தொடரில், மொத்தம் நானூறு ரன்களுக்குமேல் எடுத்தான் சச்சின். நான்கு அரை சதங்களுடன் இந்திய வீரர்களிலேயே அதிகபட்ச ரன்களை எடுத்திருந் தான் சச்சின். இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை ஆஸ்திரேலிய அணி ஏற்கனவே வென்று விட்ட நிலையில், பெர்த் நகரில் நடைபெற்ற கடைசிப் போட்டி முக்கியத்துவம் இல்லாததாகத் தென்பட்டது. ஆனால் சுவாரஸ்யமில்லாத அந்தப் போட்டிக்கு விளக்கேற் றியது. 19வயது சச்சினின் மூன்றாவது சதம்!


முதலில் விளையாடிய ஆஸ்திரேலிய அணி 346 ரன்கள் எடுத்தது. தொடர்ந்து ஆடிய இந்திய அணி வழக்கம்போல் தடுமாற, சச்சின் கண்மூடித் திறப்பதற்குள் 149 ரன்களுக்கு எட்டு விக்கெற்றுகள் விழுந்துவிட்டன.

ஒன்பதாவது விக்கெற்றுக்கு சச்சினுடன் இணை சேர்ந்தவர் கிரன் மோரே. அப்போது சச்சின் தனது திட்டத்தைத் தெளிவாகத் தீர்மானித்து வைத்திருந்தான். ஒவ்வொன்றாக விக்கெற்றுகள் சரிவதை எதிர்முனையிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. இனிமேல் நான் தான் விளையாடப் போகிறேன். 'நான்' மட்டும் தான் விளையாடப் போகிறேன்!

(தொடரும்)



பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரத்தின் பஞ்சாட்சரம் பா நாடகங்கள் நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டு வைத்த பேராசிரியர் சபா ஜெயராசாவிடமிருந்து "சாந்தி ரெக்ஸ்ரைல்ஸ்" உரிமையாளர் நா.சுந்தரலிங்கம் நூலின் முதற் பிரதியைப் பெற்றுக்கொள்கிறார். அருகில் கவிஞர் பஞ்சாட்சரமும் காணப்படுகிறார்.





யாழ்.மாநகர ஆணையாளராக மீள் நியமனம் பெற்ற சி.வீ.கே.சிவஞானத்துக்கு நல்லூர் வன்னியசிங்கம் பொதுப் பணி மன்றம் அளித்த வரவேற்புபசாரத்தின் போது மன்றத் தலைவர் சி.இரத்தினசபாபதி ஆணையாளருக்கு மாலை அணிவித்து வரவேற்பதை முதலாவது படத்திலும்,

மன்றச் செயலாளர் கு.அருள்நாதன் ஆணையாளர் சிவ ஞானத்துக்கு பொன்னாடை அணிவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## பரு.பிரதேச செயலர் பிரிவில்

## 8வீதிகளின் புனரமைப்புக்கென ரூ.215 மில்லியன் நிதியொதுக்கீடு

(தென்மராட்சி)

ஆழிப்பேரலையின் போது பருத் தித்துறை பிரதேச செயலர் பிரி வில் மிகவும் மோசமாகச் சேத மடைந்த எட்டு பிரதான வீதிகளின் புனரமைப்புக்கென 215 மில்லி யன் ரூபா நிதி ஒதுக்கீடு செய் யப்பட்டுள்ளதாகவும், இவற்றின் புனரமைப்புப் பணிகள் மிகவிரை வில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் வியாபாரிமூலை வீதிக்கு 2இலட்சத்து 65ஆயிரம் ரூபாவும், பீச் றோட்டுக்கு 7இலட் சத்து 10 ஆயிரம் ரூபாவும், தும்பளை வீதிக்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவும், பவுண்றி வீதிக்கு 7 இலட் சத்து 20ஆயிரம் ரூபாவும், போககறுப்பு-நதியாவெட்டை வீதிக்கு 44 இலட் சத்து 50 ஆயிரம் ரூபாவும், கொடு கல்லை- ஆழியவளை வீதிக்கு 10 இலட்சத்து 58 ஆயிரம் ரூபாவும், வாடியடி-வெற்றிலைக்கேணி வீதிக்கு 85 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாவும், மணற்காடு வீதி-பொற் பதி வீதிக்கு 53 இலட்சத்து 20 ஆயி ரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ற-16)

## தொடர்ந்து நடைபெறும் திருட்டுக்கள்

(நல்லூர்)

அண்மைக்காலமாக நல்லூர் வடக்கு கலைமகள் வீதியில் இரவு நேரங்களில் திருட்டுக்கள் அதி கரித்துள்ளதால் அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கிறார்கள்.


ஒருவார காலத்துக்குள் இரவு நேரங்களில் அப்பகுதியில் பல வீடுகளில் ஜன்னல் கம்பிகளை அறுத்தும் வளைத்தும் உட்புகுந்த திருடர்கள் பெருந்தொகைப் பணம், நகைகள், ரி.வி., டெக் முதலிய வற்றைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவங்கள் பல அப்பகுதி யில் இடம்பெற்றுள்ளன.

நேற்று அவர் வீட்டில் நடந்தது; இன்று யார் வீட்டில் நடக்குமோ என்ற அச்சத்துடனேயே அப்பகுதி மக் கள் ஒவ்வொரு இரவும் வாழ்வ தாகவும் தெரிவிக்கப்படுகிறது. (து)









கடந்த இரு வாரங்களாக இந்தியாவின் தென் மாநிலங்களில் பெய்து வரும் கடும் மழையால் அவ்வப்பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. காவிரி மற்றும் திருச்சி பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் வாகனங்களில் பயணிக்கமுடியாத மக்கள் படகுகளில் இடம் பெயர்ந்து செல்கன்றனர். பாலத்தின் மேலாக ஆற்று நீர் மேவிப் பாய்வதையும், கிராமங்கள் நீரில் மூழ்கியுள்ளதையும், படகு மூலம் இடம்பெயர்ந்து செல்லும் குடும்பம் ஒன்றையும், பாலம் ஒன்றின் ஊடான போக்குவரத்துகள் ஸ்தம்பித்துள்ளமையையும் படங்களில் காணலாம்.

# முன்னாள் உளவுத்துறை அதிகாரி சதாமுக்கு எதிராக சாட்சியம்

(பக்தாத்)

ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் ஹுசைனுக்கு எதிராக, அவரது ஆட்சியில உளவுத்துறையில முக்கிய அதிகாரியாகப் பணியாற்றியவரே வாக்குமூலம் அளித்துள்ளார்.

சதாம் ஆடசிக் காலத்தில் உளவுத்துறையில் பணியாற்றிய வாதா கலீல், பின்னர் அந்த வேலையிலிருந்து விலகி வழக்கறிஞராகப் பணியாற்றிவந்தார். அவருக்குப் புற்றுநோய் ஏற்பட்டு, இறக்கும் தறுவாயில் உள்ளார்.

சதாம் மீதான கொலை மற்றும் சித்திரவதை குற்றச்சாட்டுகள் குறித்து விசாரித்து வரும் நீதிமன்றம் கடந்த 19ஆம் திகதி சதாமை விசாரித்தது. பின்னர் விசாரணை நவம்பர் 28க்கு ஒத்திவைக்கப்பட்டது. ஆனால், சதாம் மீதான வழக்கில் முக்கிய சாட்சியாகக் கருதப்படும் கலீல், அதற்குள் நோயால் இறந்துவிடக்கூடும் என்று நீதிமன்றம் கருதியதால், உடனடியாக அவரது சாட்சியத்தைப் பதிவுசெய்துவிட வேண்டும் என்று முடிவு செய்தது.

அதனால் அந் நீதிமன்றத்தின் சிறப்பு அமர்வுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது, சதாமுக்கு எதிராக வாதா கலீல் வாக்குமூலம் அளித்தார். அது கசட்டில் பதிவுசெய்யப்பட்டதுடன், எழுத்து பூர்வமாகவும் பதிவுசெய்யப்பட்டது என்று நீதிமன்றத்துக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

கலீல் மீதும் பல குற்றச்சாட்டுகளை சுமத்தி ஈராக்கிய அரசு அவரைக் கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. 1982 ஜூலையில் துஜெய்ல் என்ற கிராமத்தில் சதாம் ஹுசைனைக் கொலை செய்ய முயற்சி நடந்தது. அதில் அவர் தப்பிவிட்டார். அதையடுத்து, அந்தக் கிராமத்தைச்சேர்ந்த ஷியா பிரிவு முஸ்லிம்கள் 148பேர் படுகொலை செய்யப்பட்டனர். அதற்குக் காரணம் சதாம் ஹுசைனும் மேலும் 7 பேரும்தான எனக்கூறி, அவர்கள் மீது கொலை வ்ழக்கு தொடரப்பட்டுள்ளது.

அப் படுகொலை நடந்த காலத்தில் சதாம் ஆட்சியில், உளவுத்துறை அதிகாரியாக இருந்தவர்தான் வாதா கலீல். அவரே சதாமுக்கு எதிராக தற்போது வாக்குமூலம் அளித்துள்ளார் என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன. (ற)

# நிரம்பி வழியும் அமெரிக்க சிறைகள்! 2004 இல் மட்டும் 23 இலட்சம் கைதிகள்!!

(வோஷிங்டன்)

உலகிலேயே அமெரிக்க சிறைகளில் தான் கைதிகள் எண்ணிக்கை மிக அதிகம். 2004ஆம் ஆண்டில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை மேலும் 1.9சதவீதம் அதிகரித்துள்ளது. அமெரிக்க மாகாணங்களில் உள்ள சிறைகளில் அவற்றின் கொள்ளளவைவிட 40 சதவீதம் கூடுதலாக கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து அமெரிக்க நீதித்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் மாகாணம் மற்றும் உளளூர் சிறைகள் உட்பட அமெரிக்காவில் உள்ள சிறைகளில் கடந்த ஆண்டு இறுதியில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 23 இலட்சம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அமெரிக்காவில் கைதிகள் எண்ணிக்கை கடந்த பத்து ஆண்டுகளில் சராசரியாக 3.2 சதவீதம் என்ற அளவில் அதிகரித்துள்ளது. இருப்பினும் கடந்த ஆண்டு 1.9 சதவீதமே உயர்ந்துள்ளது.

மற்றைய நாடுகளைவிட அமெரிக்காவில்தான் அதிகமானோர் சிறைகளில் உள்ளனர் என்று இலண்டனில் உள்ள கிங்ஸ் கல்லூரி மேற்கொண்ட ஆய்வின் போது தெரியவந்துள்ளது. உலகளவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கையில் சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.

சீனாவில் சிறைச்சாலைகளின் எண்ணிக்கை 14 இலட்சம். சீனாவின் மக்கள் தொகை 130 கோடி. ஆனால் அமெரிக்காவின் மக்கள் தொகை 29.6 கோடி மட்டுமே. இருந்தாலும், அமெரிக்காவில் சிறைக் கைதிகளின் எண்ணிக்கை மிக அதிகபட்சமாக உள்ளது.

கடந்த ஆண்டு ஒரு இலட்சம் மக்களில் 486பேர் கைதிகள் என்ற நிலை இருந்தது. பத்து ஆண்டுகளுக்கு முன் ஒரு இலட்சம் மக்களுக்கு 411பேர் என்ற அளவில் கைதிகள் இருந்தனர். பத்து ஆண்டுகளில் 18 சதவீதமாக உயர்வு அடைந்துள்ளது எனக குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# தென்கிழக்கு ஆசிய நாடுகளில் வேகமாகப் பரவும் பறவைக்காய்ச்சல்

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பறவைக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவுகிறது. பறவைகளைத் தாக்கும் இந்த நோய் மனிதர்களுக்கும் பரவும் அபாயம் உள்ளது.

இந்த நோய் இப்போது ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவியுள்ளது. இங்கிலாந்திலும் இந்த நோய் பரவி இருப்பதற்கான அறிகுறிகள் ஆய்வு மூலம் தெரியவந்துள்ளன.

பறவைக்காய்ச்சல் நோய் பரவிய நாடுகளில் இலட்சக்கணக்கான கோழிகள், வாத்துக்கள், வான்கோழிகள் என்பன கொன்று குவிக்கப்பட்டன. துருக்கி, ருமேனியா, ரஷ்யா, கிரீஸ், தாய்லாந்து ஆகிய நாடுகளில் இருந்து வளர்ப்புப் பறவைகள் மற்றும் கோழிகளின் இறைச்சிகளை இறக்குமதி செய்ய ஐரோப்பிய யூனியன் நாடுகள் தடை விதித்துள்ளன.

பறவைக்காய்ச்சல் நோய் பரவுவதைத் தடுக்கும் வழிமுறைகள் பற்றியும் பறவை இறைச்சிகளின் இறக்குமதிக்குத் தடை விதிப்பது பற்றியும் ஐரோப்பிய யூனியன் நாடுகளின் விவசாயத்துறை மந்திரிகள் மற்றும் சுகாதாரத்துறை மந்திரிகள் கூடி ஆராய்ந்துள்ளனர். (ற)

## பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இன்று தீபாவளிக்கொண்டாட்டம்

(இலண்டன்)

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் இன்று வியாழக்கிழமை தீபாவளி பண்டிகை கொண்டாடப்படவுள்ளது. இதில் நூற்றுக்கும் அதிகமான எம்.பிக்கள், மூத்த அமைச்சர்கள், தூதரக அதிகாரிகள் பங்கேற்கவுள்ளனர்.

அந்த நிகழ்ச்சியில் நாட்டியம், இசை நிகழ்ச்சி, விருந்து, சமஸ்கிருதப் பாடல்கள் என்பன இடம்பெறவுள்ளன. இந்த நிகழ்ச்சியையொட்டி பிரதமர் ரொனி பிளேயர் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் மட்டும் 7இலட்சம் இந்துக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



ஈக்குவடோர் நாட்டின் காலாபகோஸ் தீவில் கடந்த இரு நாட்களாக சீறிய எரிமலை தன்னுடைய சீற்றத்தை முடித்துக்கொண்டது.

துதிபாடும் கூட்டத்தை உருவாக்குவதே அரசாங்கக் கலை. -பெர்னார்ட்ஷா

வலம்புரி

# அநுராவின் கூடாத கூட்டம் குடியைக் கெடுத்துவிட்டது

அமெரிக்காவில் புயல், இந்தியாவில் வெள்ளப் பெருக்கு, பாகிஸ்தானில் பூமியதிர்ச்சி இவ்விதம் இயற்கை அழிவுகள் நடந்துகொண்டிருக்கும்போது இலங்கையில் "ஜனாதிபதியின் சீற்றம்" என்று கூறுமளவுக்கு நிலைமை உள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதிலிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரும் குழ்ப்பத்திற்கு ஆளாகியுள்ளார். இந்தக் குழப்பத்திற்குக் காரணம் பிரதமர் மகிந்த ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தமை என்று கூறினாலும், அதற்குள் இருக்கக்கூடிய உள்ளார்ந்தமான விடயம் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆட்சி விடைபெற்றுச் செல்கின்றது என்பதேயாகும்.

ஜனாதிபதித் தேர்தலில் அநுரா பண்டாரநாயக்கவை வேட்பாளராக நியமிப்பதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இலக்காக இருந்தது. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எண்ணத்திலேயே ஜே.வி.பியை அநுரா தனது கட்சிக்கு அழைத்துவந்தார்.

"நீ அழைத்துவருவது பேய், அது உன்னையே அழித்துவிடும். பேயுடன் கூட்டுவேண்டாம்" என்றெல்லாம் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அநுராவுக்கு எடுத்துக்கூறினர். எனினும் அந்தப் போதனைகள் எதுவும் அவரைச் சென்றடையவில்லை.

பண்டாரநாயக்க வம்சத்தின் கடைசி வாரிசு நானே! அடுத்த ஜனாதிபதியாகும் தகுதியும், அரசியல் பாரம்பரியமும் எனக்கே உண்டு என்றெல்லாம் அநுரா புலம்பினார். அநுராவின் புலம்பல் அறியாமையின்பாற்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியை நிர்க்கதியாக்கும் சாத்தானே ஜே.வி.பி. அதனோடு கூட்டுவைக்காதே. கட்சியின் விசுவாசிகள் மீண்டும் மீண்டும் எச்சரித்தனர்.

"கெடுவான் கேடு நினைப்பான" என்றாங்கு ஜே.வி.பியின் கரம்பற்றி இழுத்து கட்சியின் உள்ளறைக்குள் கொண்டுசென்றார் அநுரா. அதற்கு சந்திரிகா அம்மையாரும் உடன்பட்டார். எல்லாம் ஜனாதிபதியாகும் நப்பாசையில் நடந்துமுடிந்தன.

ஆனால் அநுராவின் பேராசையைப் பயன்படுத்தி ஜே.வி.பி தான் நினைத்தவாறு சுதந்திரக்கட்சியை சீர்குலையவைத்தது. மகிந்தவை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வைத்ததன் மூலம் பண்டாரநாயக்கவின் வம்சத்தையே கட்சியில் இருந்து வெளியேற்றும் நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

யார் என்ன செய்வது? கூடாத கூட்டம் குடியையே கெடுத்துவிடும் அபாயத்தைக் கொண்டுவந்துவிட்டது அவ்வளவுதான்.

# உட்பூசல்களைப் பொருட்படுத்தாமல் மஹிந்தவை வெற்றிபெற வைக்க வேண்டும்

## -தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சிகளின் மத்தியில் பிரச்சினைகள் இருக்கின்ற போதிலும் அதனை மறந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்ய வேண்டுமென்று மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களுக்கும் ஜனாதிபதிக்குமிடையிலான சந்திப்பின் போது இந்த வேண்டுகோளை அவர் விடுத்துள்ளார்.

இதேவேளை பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களின் கூட்டத்தின் போது ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்தராஜபக்ஷவை கடுமையாக விமர்சித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளை தாரை வார்த்துவிட்டு அவர் இனவாதிகளுடன் இணைந்து கொணடிருப்பதாக ஜனாதிபதி குற்றம்சாட்டியுள்ளார். இந்த நிலையில் தம்மால் பதவியை விட்டுச்செல்லும் போது இனவாதியாகச் செல்லமுடியாது என்று ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இந்தக் கூட்டத திறகு பொதுஜன ஐக்கிய முன்னணியின் தலைவர்களான டக்ளஸ் தேவானந்தா, சுஸில் பிறேமஜெயந்த, நிமால சிறிபால டி சில்வா, தினேஷ் குணவர்த்தன, டியூ. குணசேகர, திஸ்ஸ விதாரண, கீத்தஞ்சன குணவர்த்தன,அலவி மௌலானா ஆகியோர் பங்கேற்றனர். (ந-9)

# அங்கவீனர்கள் வாக்களிக்க விசேட நடவடிக்கைகள்

(கொழும்பு)

அங்கக் குறைபாடுகளை எதிர்கொள்ளும் வாக்காளர்களுக்கு போக்குவரத்து வசதிகளைச் செய்து கொடுக்க தேர்தல் செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 17ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக வாக்குச் சாவடிகளுக்குச் செல்வதில் சிரமங்களை எதிர்கொள்ளும் அங்கவீனர்கள் விசேட போக்குவரத்து அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பிக்க முடியும் எனத் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமது தேர்தல் தொகுதிக்குப் பொறுப்பான தெரிவத் தாடசி அதிகாரிக்கு இதற்கான விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அடுத்த மாதம் 10ஆம் திகதிவரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.இந்த விண்ணப்பத்துடன் தமது குறைபாட்டைக் குறிப்பிடும் மருத்துவ அறிக்கையை சமர்ப்பித்தால் தெரிவத்தாட்சி அதிகாரிகளின் பணி இலகுவாகும் எனத் தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட வாக்காளர்கள் யாழ்.தெரிவத்தாட்சி அதிகாரியிடம் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேணடும்.முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட வாக்காளர்கள் வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரியிடம் இவ் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# பொதுமக்களின் முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்த விசேட நடவடிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெறும் முறைகேடுகள் குறித்து பொதுமக்களிடம் இருந்து கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பாக துரிதமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுமக்களின் இவ் விசாரணைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவில் கடமையாற்றி ஓய்வுபெற்ற பிரதிப பொலிஸ் மா அதிபர்கள் இருவர் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தேர்தல் காலத்தில் பொலிஸார் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக 12 அம்சங்கள் அடங்கிய ஆலோசனைகள் ஆணைக்குழுவினால் பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்த யோசனைகளில் தேர்தல் ஆணையாளரின இரண்டு யோசனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ந-8)

# வட-கிழக்கில் போஷாக்கின்மை உயர்வு

(கொழும்பு)

வட-கிழக்கு மாகாணத்தில் போஷாக்கின்மை 46 வீதமாக அதிகரித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகவங்கி மேற்கொண்ட ஆய்வுவொன்றில் வட-கிழக்கில் 50 வீதம சிறுவர்களும் 46 வீதம் சிறுமிகளும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் 5 வயதிற்குக் குறைந்த சிறுவர்களில் மூவரில் ஒருவர் போதுமான எடையுடன் காணப்படவில்லையெனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலக வங்கியினால் வட-கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வின் முடிவு அறிக்கை உலக வங்கியில் இலங்கைக்கான பணிப்பாளரினால் நிதியமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (ந-7)

# வாக்காளர் அட்டைகள் இன்று முதல் விநியோகம்

(கொழும்பு)

அஞசல் மூலம் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்காக அவை அஞ்சல் திணைக்களத்திற்கு இன்றையதினம் ஒப்படைக்கப்படவுள்ளன.

அரசாங்க ஊழியர்களுக்கான அஞ்சல் வாக்காளிப்புக்கள் எதிர்வரும் 7ஆம் திகதி நடைபெறவுள்ளன. இதேவேளை எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் நிறைவடையவுள்ளன.

இந்த நிலையில், தமக்கான வாக்காளர் அட்டைகள் கிடைக்காதவர்கள் அஞ்சல் மையங்களுக்குச் சென்று தமக்கான வாக்காளர் அட்டைகளைப் பெற்றுக்கொள்ளலாமென்று தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.(ந-9)

# சுனாமியால் உயிரிழந்த மாணவர்களுக்கு அஞ்சலி

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கில் உள்ள வத்திராயன் கிராமத்தில முகுந்தன் முன்பள்ளியில் கல்வி கற்று சுனாமி அனர்த்தத்தின் போது பலியான மாணவர்களை நினைவுகூரும் நிகழ்வொன்று நடைபெற்றுள்ளது.

வத்திராயன் இடைத்தங்கல் முகாமில் உள்ள முகுந்தன் முன்பள்ளியில் கடந்த 24ஆம் திகதி பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியத்தை சேர்ந்த க.சிறீக்காந் தலைமையில் இந் நிகழ்வு நடைபெற்றது.

முதல் நிகழ்வாக பொதுச்சுடரினை முகுந்தன், சுலகசன் ஆகிய இரு மாணவர்களின் தயாரான தி.அற்புதமலா ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை கடற் கரும்புலிகளின் தந்தை ந.மயில்வாகனம் ஏற்றிவைத்தார்.

முகுந்தனின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவிதது ஈகச்சுடர் ஏற்றப்பட்டதுடன் சுனாமியின் போது உயிரிழந்த 15 மாணவர்களின் உருவப் படத்திற்கு ஆசிரியர் க.தயாமதி ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தார். 15 மாணவர்களின் பெற்றோர்களும் மக்களும் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். (ந-23)



# சாயி அருள் அமுதம்

தானே என்றும் எங்கனும் பிரசன்னமான பொருளெனவும் தனது ஒவ்வொரு செயலும் அசைவும் பக்தியினாலும், அர்ப்பணிப்பினாலும் துண்டாடப்பட வேண்டும் என்பதையும் சாதகன் உணர்ந்து அறியும் பொருட்டு சாஸ்திரங்களில் கூறப்பட்டுள்ள பதினாறு வகையான வணக்க முறைகளும் மனிதர்களுடைய மனத்தை அகங்காரத்தினின்றும் அதனுடன் கூடிய குற்றங்களில் இருந்தும் தூய்மைப்படுத்துவதை நிச்சயப்படுத்துகின்றன. இதுவே 'சித்த சுத்தி' ஆகும். அதாவது ஒருவருடைய உளளுணர்வின் எல்லா நிலைகளையும் சுத்திகரித்தலாகும்.

நாளாந்த நற்சிந்தனை

## சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை மறுதினம் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் இ.த. விக்னராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

குறித்த கலந்துரையாடலில் சிறுவர் இல்லங்கள் தொடர்பான நடைமுறைகள், முறைப்பாடுகள் என்பன பற்றி கலந்துரையாடப்படவுள்ளது. இக்கலந்துரையாடலில் யாழ்ப்பாண நீதி நிர்வாக பகுதியைச் சேர்ந்த பிரதேச செயலர்கள், நன்னடத்தை அதிகாரிகள்,சிறுவர் உரிமை பாதுகாப்பு அலுவலர்கள், சிறுவர் இல்ல பொறுப்பாளர்கள் அனைவரும் தவறாது சமுகம்மளிக்குமாறு யாழ்.நீதிவான் நீதிமன்ற பதிவாளர் க.மீரா அறிவித்துள்ளார். (ச-19)

## ஐம்பதாம் ஆண்டு நிறைவு விழா

(சாவகச்சேரி)

கைதடி விக்னேஸ்வர வித்தியால யத்தின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 1.30 மணிக்கு அதிபர் ச.ஞானலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜீனா இருதயநாதன் பிரதம விருந்தினராகவும் சாவகச்சேரி கோட்டக்கல்வி அதிகாரி நா.சத்தியநாதன் கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். (ச-29)

## விமானம் வீழ்ந்து நொருங்கிய சம்பவம் மூவர் கொண்ட விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான ஆளில்லா வேவுவிமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பறப்பில் ஈடுபட்டிருந்த வேளை வீழ்ந்து நொருங்கியமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள மூவர் அடங்கிய விசேடகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த மூவர் அடங்கிய விசாரணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்க விமானம் கொள்வனவு செய்யப்பட்ட இஸ்ரேல் நிறுவனத்தின் பொறியியலாளர்கள் இருவர் இலங்கைக்கு வருகை தரவுள்ளதாக விமானப்படையின் தளபதி எயார் மார்ஷல் டொனால் பெரேரா தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட வேவுவிமானம் கடந்த 19 ஆம் திகதி புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் பறந்து கொண்டிருந்தபோதே அவர்களின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வீழ்ந்துநொருங்கியது.

இந்த விமானம் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது அதன் இலத்திரனியல் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக கட்டுப்பாட்டு நிலையத்தின் ஊடான தொடர்புகள் துண்டிக்கப்பட்டதாக விமானப்படை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச-8)

## மூன்றாவது நாளாகத் தொடர்ந்த பட்டதாரிகளின் போராட்டம்

அரசதுறைகளில் பயிலுநர் அல்லாத பட்டதாரிகள் மூன்றாவது நாளாக நேற்றும் யாழ்.கல்விவலயம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்கள் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை நேற்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பதிகாரி றோகித பிரியதர்சனவிடமும் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேசிடமும் கையளித்தனர்.

இம் மகஜரின் பிரதிகள் வடக்குக் கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர், மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர், கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு , பிரதம மந்திரி மகிந்தராஜபக்ஷ , எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்க , யாழ் கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. (ச-19)

## நூலகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும்

(சாவகச்சேரி)

வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடைபெறும் நூலகக் கண்காட்சியும் புத்தக விற்பனையும் இன்றும் நாளையும் சாவகச்சேரி பொது நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சி காலை 10 மணிமுதல் இரவு 7 மணிவரை நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுக்கு யாழ்.மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வுகள் சாவகச்சேரி நகரசபை செயலாளர் திருமதி குணமணிதேவி ஆறுமுகம் தலைமை தாங்கவுள்ளார். (ச-29,21)

## வாக்காளர்....

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும். மேற்குறிப்பிட்ட திகதிகளில் வாக்காளர் அட்டைகள் பெறாதவர்கள் தமது தேசிய அடையாள அட்டையுடன் தத்தமது கடித தபால்நிலையங்களிற்கு சென்று பெற்றுக்கொள்ள முடியும்.

வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படும் சகல பிரதான தபால் நிலையங்களுக்கும் பொலிஸ்பாதுகாப்புவழங்கப்பட்டுள்ளது. (ச-19)

## வவுனியாவிலும்....

கத்தின் பின்புறத்தில் விழுந்து இக்குண்டு வெடித்தது. இக்காரியாலயத்தினையும் தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டு செயலணி காரியாலயத்தினையும் ஒரு மதில் மட்டுமே பிரிக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இச்சம்பவத்தில் யாரும் காயமடைய வில்லை. சம்பவம் நடைபெற்ற இடத்தினை வவுனியா நகர இராணுவத்தினரும் பொலிஸாரும் சென்று பார்வையிட்டனர்.

இது கைக்குண்டுத் தாக்குதலென இராணுவத்தினர் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டுக் குழுவினரும், வன்னிமாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் சம்பவ இடத்தினைப் பார்வையிட்டனர்.இந்தச் சம்பவம் காரணமாக தாம் அதிர்ச்சியடைய வில்லை என்றும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டு நிகழ்வு ஏற்பாடுகள் சிறப்பாக நடை பெற்று வருவதாகவும் செயலணிக் குழுத்தலைவர் எஸ். என்.ஜீ.நாதன் தெரிவித்தார். (ச-4)

## தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடன் வவுனியா பொலிஸ் அதிகாரி சந்திப்பு

(வவுனியா)

வன்னி மாவட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வவுனியா தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டுகுழுவின் பிரதிநிதிகளுக்கும் வவுனியா மாவட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அபயசிங்க பண்டாரவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் ஏற்பாட்டில் வைரவப்புளியங்குளம் பகுதியில் அமைந்துள்ள போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அலுவலகத்தில் நேற்று பிற்பகல் இச் சந்திப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது வவுனியாவில் இன்று நடைபெறவுள்ள தமிழ்த்தேசிய எழுச்சி நிகழ்வின் நோக்கம் குறித்து பொலிஸ்அதிகாரிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

எழுச்சி நிகழ்வுக்கு பொலிஸார் பூரண பாதுகாப்பு வழங்குவார்கள் என பொலிஸ் அதிகாரி கண்காணிப்புகுழுவின் முன்னிலையில் உறுதியளித்தார்.

அத்துடன் எழுச்சி நிகழ்வுக்கு புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்தும் மக்கள் வருகை தருவார்கள் என பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது.

இச் சந்திப்பில் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் விநோதராதலிங்கம் சிவசக்தி ஆனந்தன் மற்றும் எழுச்சி நிகழ்வின் தலைவர் நாதன், செயலாளர் கிறிஸ்தோப்பர், மாவட்ட கண்காணிப்புகுழுவின் தலைவர், பொலிஸ் அதிகாரி அபயசிங்க பண்டார ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் இராணுவ உயர் அதிகாரிகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. (ச-8)

## ஐரோப்பியஒன்றியம் இணக்கம்

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை கண்காணிக்க ஐரோப்பிய ஒன்றியம் தனது கண்காணிப்பாளர்களை அனுப்பிவைக்க இணங்கியுள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் வேண்டுகோளினை ஏற்று ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜோன் கஸ்னகன் தலைமையில் இக்குழுவினர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலின்போது வன்முறைகள் நடக்ககூடுமென்ற அச்சம் தெரிவிக்கப்டும் நிலையில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.நவம்பர் 17 ஆம் திகதி தேர்தல் முடிந்தவுடன் தேர்தல் தொடர்பான உடனடி அறிக்கையை இக்குழு வெளியிடும். அதன் பின்னர் தேர்தல் குறித்தமுழுமையான அறிக்கைகளும் பரிந்துரைகளும் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டது. (ச)

## விடுதலைப்புலிகளின் கொட்டத்தை...

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திருகோணமலையில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் பாதுகாப்பான கண்ணாடிக்கூட்டுக்குள் நின்று உரையாற்றினார். அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் ,

திருகோணமலை மூன்று இனங்களுக்கும் சொந்தமானது. இருந்தும் அது தொடர்ந்தும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கிறது.

நான் ஜனாதிபதியாக தெரிவானதும் எனது கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்கு அழுத்தம் கொடுப்பேன். அத்துடன் விரைவில் நாட்டில் யுத்தமற்றதான சூழ்நிலை யினை உருவாக்குவேன் எனபிரதமர் உறுதியளித்தார்.

கூட்டத்தின் முடிபில் நிருபர்கள் அவரை சந்திக்க முயன்றபோதும் பலத்த பாதுகாப்புடன் பிரதமர் வெளியேறினார்.

உலங்கு வானூர்தியில் மைதானத்தை வந்தடைந்த பிரதமர் மகிந்தவை பலத்த இராணுவப் பாதுகாப்புடன் மேடைக்கு அழைத்து வந்தனர்.

ஏராளமான இராணுவத்தினர் மேடையையும் மைதானத்தையும் சூழ்ந்திருக்க சுருக்கமான உரைகளுடன் வேகமாக கூட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தான் ஜனாதிபதியானதும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்து பேசுவேன் என முன்னர் கூறிய பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தற்போது விடுதலைப் புலிகளின் கொட்டத்தினை அடக்கியே தீருவேன் என கூறியுள்ளமை தமிழ் மக்களுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. (ச-4)

## வாக்குச்சாவடி....

பொதுத்தேர்தலின் போது ஐரோப்பிய கண்காணிப்பாளர்கள் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டிருந்ததாகவும் எனினும் அவர்கள் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டிருந்த போதும் வடக்குக் கிழக்கில் தேர்தல் நீதியான முறையில் நடைபெறவில்லை என கண்காணிப்பாளர்கள் தெரிவித்தனர் என சிறிலங்கா முற்போக்கு முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் பீற்றர் நெல்சன் பெரேரா தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாக்குச்சாவடிகளை அமைப்பதற்கு தடைவிதிக்க தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவு இடவேண்டும் என்று அவர் அந்த மனுவில் மேலும் தெரிவித்துள்ளார். (ச-4)

## தமிழ்த் தேசிய எழுச்சி...

மூன்று மணிக்கு அணிதிரளும் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியத்தின் விடுதலைக்காக பொங்கியெழுந்து குரல் கொடுக்கவுள்ளனர்.தமிழர் தாயகத்தில் இருந்து இராணுவத்தினர் வெளியேறவேண்டும்,ஐரோப்பிய யூனியன் தமிழீழ விடுதலைப் புலிகளை வரவேற்பதில்லை எனும் முடிவை விலக்கிக் கொள்ள வேண்டும் உட்பட பல்வேறு உணர்வுகளை எழுச்சி நிகழ்வில் மக்கள் வெளிப்படுத்தவுள்ளனர். (ச-4)

## போராளி கோபி...

அவரை சாட்சிகள் எவரும் அடையாளம் காட்டவில்லை இந்நிலையில் நேற்று கொழும்பு நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் அவர் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்ட போது சந்தேக நபரின் மீது வழக்குத்தாக்கல் செய்ய போதிய சாட்சிகள் இல்லையென சட்டமா அதிபர் சமர்ப்பித்த அறிக்கையினை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் அவரை விடுதலை செய்ய உத்தரவிட்டது.அத்துடன் கைதுசெய்யப்பட்டு கொழும்பிற்கு கொண்டு வந்த பாதுகாப்புடனேயே அவரை மீண்டும் கொண்டு சென்று யாழ்ப்பாணத்தில் விடுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ச-4)


திருமணக்கார் (குளிரூட்டியது) வாடகைக்கு



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★ விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.
தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்
T.P:0777-903090இ 077-3086939இ0777-246117இ 077-6018467
(C-அ1699)

மனோகரா யாழ்.
பார்த்திபன் • லஷ்மிராய் • வடிவேல்
குண்டக்க மண்டக்க... நடித்த
கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30
30.10.2005 முதல் யாழ் நகரில் முதன் முறையாக dts ஒலி நயத்துடன் DIGITAL SOUND
இளைய தளபதி விஜய் வெடிக்கும் சிவகாசி
(சில தினங்கள் மட்டும் காலை 8.30 காட்சி காண்பிக்கப்படும்)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
ஆர்ஜா, சோனியாஅகர்வால் நடித்த
ஒரு கல்லூரியின் கதை
கா.நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)
தீபாவளி வெளியீடு தனுஷ் நடித்த
அது ஒரு கனாக்காலம்

நிறைச்சனாஸ் சங்கானை
சரத்குமார் (இரு வேடங்களில்)
நமீதா . வடிவேல் நடித்த
சாணக்கியா
கா.நே: 11.00, 02.45, 6.00, (பு.நே)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.